
# வைர விழா

## சிறப்பு மலர்



ஓவியர்:- தொண்டர்.

**1939 — 1999**

வெளியீடு

**பன்னாலை திருவெம்பாவைக்**
**கூட்டுப்பிரார்த்தனைச் சபை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பன்னாலை

# திருவெம்பாவைக்

# கூட்டுப்பிரார்த்தனைச் சபை

# THIRUVEMPAVAI CHORAL SOCIETY

" பாடும் பணியே பணி "

# வைரவிழா மலர்

## 1939 — 1999

## Diamond Jubilee Souvenier

23-12-1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னாலை

# திருவெம்பாவைக் கூட்டுப்பிரார்த்தனைச் சபை

# வைர விழா

## மலர் ஆசிரியர்

திரு செ. சிவபாலன்

## மலர்க் குழு

திரு செ. சிவபாலன்
திரு. க. விக்னேஸ்வரன்
திரு சு. ஏழூர்நாயகம்
திரு. ந. பகீரதன்
திரு. வி அம்பலவாணர்

## நிதிக் குழு

திரு வி. அம்பலவாணர்
திரு. ந. துரைரத்தினம்
திரு ந. நடராசா
திரு. செ. ஜெயபவன்
திரு. க. மகேஸ்வரன்
திரு செ. சிவபாலன்

## விழாக் குழு

திரு தி. துரைராசசிங்கம்
திரு நா. திருபாலசிங்கம்
திரு சி வேலாயுதம்
திரு. ந. கதிர்காமத்தம்பி
திரு. மு. சிவஞானம்
திரு வ. துரைசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பன்னாலை திருவெம்பாவைக் கூட்டுப்பிரார்த்தனைச் சபை

## சிறந்து வளர்க

தெய்வம் தெளிர்ந்தோர் சைவம் வளர்த்தோர்
உய்யும் நன்னெறி உபதேசித்தோர்
வாய்ந்த பெருகை கொண்ட நற்பதி
பன்னாலைப்பதி அப்பதிக் கண்ணே
அறிவும் பண்பும் தெய்வம் போற்றும்
நெறியும் கொண்டோர் ஒருங்கிணைந்தனராய்
அமைத்தனர் ஓர்சபை அச்சபைதானே
பன்னாலைத் திருவெம்பாவைக் கூட்டுப்
பிரார்த்தனைச் சபையென யாவரும் அறிவர்!
அறுபதாண்டாக இவ்வரும் சபைதான்
திருவெம்பாவைக் கூட்டுப் பிரார்த்தனை.
சிறப்புற நடத்தி வருவதை அறிவோம்!
பிறவியின் பயனும் இறைவனின் பெருமையும்
வீடுபேறு அடையும் மார்க்கமும் காட்டி
யாவரும் உய்ய வழிசெய்யும் இச்சபை
வைர விழாக் கொண்டாடுதல் இனிதே
இச்சபை ஆற்றும் இறைபணி மேலும்
சிறந்திடத் தெய்வத் திருவ்டி துணையே.

புலவர். ம. பார்வதிநாதசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1999ம் ஆண்டு
# திருவெம்பாவைக் கூட்டுப்பிரார்த்தனைச் சபை செயற்குழு

### போஷகர்

திரு. கா. கதிர்காமத்தம்பி
திரு. வி. சங்கரப்பிள்ளை
திரு. வை. பொன்னையா

### தலைவர்

திரு. சி. சிவபாலசுப்பிரமணியம்

### உப தலைவர்

திரு. ந. பொன்னுத்துரை
திரு. ந. துரைரத்தினம்

### செயளாளர்

திரு. க. விக்னேஸ்வரன்

### உப செயலாளர்

திரு ந. நடராசா

### பொருலாளர்

திரு. வி அம்பலவாணர்

### உப பொருளாளர்

திரு. க. மகேஸ்வரன்

### நிர்வாக சபை அங்கத்தவர்கள்

திரு சு. ஏழூர்நாயகம்
திரு. செ. சிவபாலன்
திரு. க சிவானந்தம்
திரு சி வேலாயுதம்
திரு. ந கதிர்காமத்தம்பி
திரு. ந. பகீரதன்
திரு. சு. பாலச்சந்திரன்
திரு தி. துரைராசசிங்கம்
திரு. ஞ லகிதரன்
திரு. நா. திருபாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**

அருளிய

# அருளாசிச் செய்தி

**சிவநேசக் செல்வர்களே!**

பன்னாலை திருவெம்பாவை கூட்டுப் பிரார்த்தனை சபை வைரவிழா காண்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். ஒவ்வொரு வருடமும் வரும் மார்கழி மாதத்தில் வரும் திருவெம்பாவை காலத்தில் இச்சபையானது கூட்டுப்பிரார்த்தனை மூலமாக மக்களை ஒருமுகப்படுத்தி தெய்வீக உணர்வு மூலமாக மனநிம்மதி உடன் வாழும் வாழ்வை அறுபது ஆண்டுகள் இப்பணியின் மூலமாக இப்பிரதேசத்து மக்கள் யாவரும் சந்தோசமான வாழ்க்கையினைப் பெற்றுள்ளனர். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் நிறைவான வாழ்வு வாழ வேண்டும் என விரும்புவது இயற்கை நியதி. இவ் வாழ்க்கையை பெற்றுத் தருவது இறைத்திருவருளாகும். அத் திருவருளின் நோக்கம் ஆக அமைந்தவைகளே சடங்குகளும், விழாக்களும் ஆகும். வழிபாட்டை செய்வதுக்கு பன்னிரெண்டு மாதங்களில் மார்கழி மாதம் நிறைவான மாதமாகும். ஆடல்வல்லானாகிய இறைவனுக்கு ஒரு வருடத்தில் ஆறுதரம் அபிஷேகம் நடைபெறும். மார்கழி மாதம் வரும் திருவாதிரை நட்சத்திரத்தில் நடைபெறுவது ஆறாவது அபிஷேகமாகும். நட்சத்திரங்களில் சிறப்புடையது திருவாதிரை ஆகும். திருமுறையை தந்த திருஞானசம்பந்தரும் திருவாதிரை தினத்திலே அவதாரம் செய்து, திருவாதிரை தினத்திலே இறைவனிடம் ஞானப்பால் உண்ட சிறப்பாகும். இம் மார்கழி மாதத்தில் திருவெம்பாவை காலமாகிய பத்து நாட்களும் மணிவாசகப் பெருமானின் திருவாசகப் பாடல்களையே ஓத வேண்டும் என்பது நியமமாகும் திருவெம்பாவை கூட்டுப் பிரார்த்தனை எனும் பெயரில் இயங்கும் இச்சபை அறப்பணிகளையும், தருமப் பணிகளையும் செய்ய இறைவனை வேண்டுகின்றோம். இச்சபைக்கு தொண்டு செய்யும் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிப்பானாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகா சமேத ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி கோவில்
ஆதீன கர்த்தாவும் சிவாச்சாரியாருமாகிய

## சிவஸ்ரீ கு. நகுலேஸ்வர குருக்கள் அவர்கள் அருளிய

# அருளாசி

பன்னாலை திருவெம்பாவைக் கூட்டுப் பிரார்த்தனைச் சபை தனது 60 ஆண்டு காலப் பணியை நிறைவாக்கி மணி விழாக் காண்கிறது என்ற செய்தி சைவ மெய்யன்பர்கள் எல்லோர்க்கும் மன மகிழ்வைத் தருவதாகும். இரண்டு தலைமுறை காலம் பணிசெய்து மூன்றாவது தலைமுறைக்கும் இப் பணியை தொடர்வது பெருமைக்குரிய விடயம். அத்துடன் இச் சபையைத் தொடங்கியவர்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பதும் இளைய தலைமுறையினருக்கு அவர்கள் முன்மாதிரியாக வாழ்வதும் போற்றுதலுக்குரியதாகும்.

மாதங்களில் மார்கழி மிகச்சிறப்புடையது. மாணிக்கவாசக சுவாமிகள் மார்கழி நீராடலைக் கருவாகக் கொண்டு திருவெம்பாவைப் பதிகத்தைப் பாடித் தந்தார். இளம்பிள்ளைகள் அதிகாலையிலே துயில் எழுந்து, ஒருவரை ஒருவர் துயில் எழுப்பிக் கொண்டு எல்லோரும் சென்று நீராடி உமாதேவி சமேதரான சிவபெருமானை வணங்கி நாடு செழிக்கவும், கன்னிப் பெண்களுக்கு நல்ல கணவர் கிடைக்கவும் வேண்டுதல் செய்து வழிபடும் காலம் இது.

கல்லு வைத்த கோயிலெல்லாம் திருவெம்பாவைப் "பூசை வழிபாடு செய்வது எங்கள் நாட்டுப் பண்பாடு, ஊர்கள் தோறும் அதிகாலையில் கூட்டுப்பிரார்த்தனை பாடிச் சென்று மக்களைத் துயில் எழுப்பும் வழக்கம் பரவலாக உண்டு. எனினும் பன்னாலையில் இது பலரும் கூடிப் பாரிய அளவில் செய்வது சிறப்பான செய்தியாகும். அத்துடன் அது தொடர்ந்து அறுபது ஆண்டுகாலம் நடப்பது மேலும் பெருமை சேர்க்கும்.

போர் அனர்த்தங்கள் காரணமாக மக்கள் இடம் பெயர நேரிட்ட போதும், தாங்கள் போய்த் தங்கிய இடங்கள் தோறும் இப்பணியைச் செய்து வந்தமை அறிந்து மகிழாதார் இருக்க முடியாது.

இப்போது பன்னாலை மக்கள் மீளக் குடியமரத் தொடங்கியுள்ள வேளையில் இச்சபை மீண்டும் தன் சொந்த மண்ணில் மணி விழா வெடுத்து தன் பணியைத் தொடர்வது நல்ல சகுனமாகும்.

பன்னாலை மீண்டும்

"சென்ற காலத்தின் பழுதிலாத்திறனும்
இனி எதிர்காலத்தின் சிறப்பும்
இன்றிங்கு எழுந்தருளப் பெற்ற பேறிதனால்
எற்றைக்கும் திருவருளுடையோம்"

என்ற தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமானின் வாக்குப்படி செழித்தோங்க வேண்டுமென ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப் பெருமானின் திருவடிகளை நினைத்து அருளாசி வழங்குகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மாவை ஆதீன கர்த்தா

**மஹாராஜ ஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்கள்**

அருளிய

# ஆசியுரை

உள்ளம், உரை, செயல் இம் மூன்றோடும் தொடர்பு கொண்டு உயர்ந்த குறிக்கோளுடன் வாழ்வோரே வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவர். இவ்வாறு வாழ சமயத்தின் பிணைப்பும் மிக அவசியம். கையில் உழவாரத்தைக் கொண்டு புற உலக முட்களையும், நாவில் தேவாரத்தைக் கொண்டு அக உலக முட்களையும் போக்கி தாழ்வெனும் தன்மையோடு சைவமாம் சமயத்தைப் பரப்பிவந்த அப்பர் பெருமான் நமக்குச் சிறந்த வழிகாட்டித் துணையாகியவர்.

" தொழுது நிற்கின்றனன் செய்பணியெல்லாம் சொல்லுதல் வேண்டும் என வல்ல சற்குருவே " என்றார் வள்ளலார் எங்கும் எப்போதும் " நமசிவாய எனச்சொல் நாவே " என ஆறுமுக நாவலர் பணிக்கிறார். ஓயாது ஓயாது அல்லும் பகலும் பாடி அகமகிழ்ந்து முருகப் பெருமானது பாதார விந்தங்களையடைந்த அருணகிரிநாத சுவாமிகள் கூட " அரிய பாதபத்மம் அனுதினமுமே துதிக்க அரிய தமிழ்தான் அளித்த மயில்வீரா" எனப் பாடி பரவசமடைந்தார். அல்லும் பகலும் ஆடிப்பாடி அவனது திருநாமங்களையும் திருப்பாடல்களையும் கூடினின்று ஓதும்போது சூழல் தெய்வீகம் பெறுகின்றது. அலை வரிசைகளில் அமுதம் தேங்குகிறது. நிலம் கூட யௌவனங் கொள்கிறது.உள்ளங்கள் தூய்மை பெறுகின்றன. ஆற்றல் கருமங்கள் கூட புனிதமானதாக அமைகிறது. இவற்றிற்குத் தான் பெரியோர்கள் கூட்டுப் பிரார்த்தனையென வகுத்து செயற்பட்டனர். இத்தகைய கூட்டுப் பிரார்த்தனைகளை நடைபெற விடாது தடுத்துவிட மிலேச்சர்கள் பல வழிகளாலும் மிக நுட்பமாக செயற் திட்டங்களை வகுத்து செயற்படுகிறார்கள். அனேக இடர்களில் மிலேச்சர்களது இத்தீய செயல் ஊடுருவி கூட்டுப் பிரார்த்தனைகளை தடுத்துமிருக்கிறது. ஆனால் பன்னாலை வாழ் மக்கள் தம் கருமத்திலேயே நாட்டங் கொண்டதனால் பஜனைச் சபையினர் பவள விழாக் கொண்டாடுமளவிற்கு அது பரிணமித்திருக்கிற தென்றால் அதுவும் சிவன்செயலேயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதமான கைங்கரியங்களையாற்றி சிவனருளோடு இணைந்து சில தர்மங்களையாற்றும் பன்னாலை வாழ் மக்கள் புனிதமானவர்கள், சீரிய தொண்டர்கள் சிவதொண்டுகளை உச்சிமேற் சுமந்து நிறைவேற்றுபவர்கள். அந்த வகையில் இக் கூட்டுவழிபாடு பஜனையும் சீர் பெறுகிறது. ஆண்டுதோறும் மேலும் மேலும் வீறு கொண்டு இப்பஜனைப் பாடல்கள் மூவுலகிற்கும் கேட்கும் படியான வகையில் இறைவனை இறைஞ்சி அருள் பெறுமாறு அச் சபையினரை வேண்டுகின்றேன். யானும்அவ்வாறு வேண்டி பிரார்த்தித்து இப் பஜனை என்றும் மேலோங்கி வளர வேண்டுமெனவும் ஆசீர் வதிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

வரத்தலம் கற்பவிநாயகர் ஆதினகர்த்தா

**சிவஸ்ரீ. இ. சபாரத்தினக் குருக்கள் வழங்கிய**

# ஆசிச் செய்தி

மார்கழி மாதம் சிவ வழிபாட்டுக்குகந்த மாதமாகும். மணிவாசகப் பெருமானும் ஆண்டாள் பெருமாட்டியும் இக்கருத்தை வலியுறுத்தி உள்ளனர். மார்கழித் திருவாதிரை சைவ மக்களால் பண்டைக் காலம் தொட்டு கொண்டாடி வரும் திருநாளாகும். இது சிவனுக்கு உகந்த திருநாள். 'ஆதிரையான்' என்பது சிவனுக்கு ஒரு நாமம். மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாள் என்றும் இத் திருநாளை ஆண்டாள் பெருமாட்டி பாடுகிறார். திருவாதிரைக் காலம் பக்தி இயக்க மேன்மைக்குரிய காலம் என்று கூறினால் மிகையொன்றும் இல்லை.

திருவாதிரைக் காலத்தில் சமயப்பற்று நிலைநாட்டப்படுகிறது. இவ் விடயத்தில் பன்னாலைக் கிராம மக்களின் சமயப்பற்று ஓர் எடுத்துக் காட்டாகும். பன்னாலை மக்கள் 1939 ஆண்டு திருவெம்பாவை கூட்டுப் பிரார்த்தனைச் சபையை உருவாக்கி வருடந்தோறும் திருவெம்பாவைக் காலத்தில் அதிகாலையில் எல்லோரும் ஒன்று சேர்ந்து திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, சிவ்புராணம் ஆகிய திருப்பாடல்களை பாடிக் கொண்டு அக்கிராம வீதிகளின் ஊடாக ஆலயங்கள் பலவற்றையும் தரிசிப்பார்கள். இது புண்ணியப் பணியாகும்.

இப்பணி தொடர்ந்து 60 ஆண்டுகள் முடிவடைவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இப்புண்ணிய பணியின் வைரவிழா சிறக்கவும், நூற்றாண்டு விழா பல கண்டு இப் பணி தொடரவும் எல்லாம் வல்ல பரம்பொருளின் ஆசியை வேண்டி துதிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேஸ்தானம் தலைவர்

**கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி J. P. அவர்கள்**

வழங்கிய

# ஆசியுரை

''பாடவேண்டும் நான் போற்றி
நின்னையே பாடியாடி நைந்து
உருகி நெக்கு நெக்காட
வேண்டும் நான் போற்றி''

என்று பாடினார் மாணிக்கவாசகப் பெருமான். எமது சைவ வாழ்வில் கூட்டுவழிபாடு மிகவும் இன்றியமையாதது. மார்கழி மாதம் இதற்கு மிகவும் ஏற்ற மாதமாகும். வீதிகள் தோறும் ஆலயங்கள் தோறும் தேனூறும் திருப்பாடல்களைப் பாடி உய்தியடைய உகந்த மாதம் இதுவாகும்.

எனவே பன்னாலை திருவெம்பாவைக் கூட்டுப் பிரார்த்தனைச் சபையினர் இவ்வாண்டு மேற்கொள்ள இருக்கும் இவ்வருள் முயற்சி மிகவும் பாராட்டுக்குரியது இதில் பங்கு கொண்டோர் அனைவரையும் வாழ்த்தி ஆசி கூறி அமைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர், சிவபூதவராயர் ஆலயங்களின்

அர்ச்சகர் பிரமஸ்ரீ. ம. மகேந்திர சர்மா அவர்களின்

# ஆசிச் செய்தி

செந்தமிழும் சைவமும் செழித்தோங்கி விளங்கும் புண்ணிய பதியாம் பன்னாலை என்று அழைக்கப்படுகின்ற புண்ணிய ஷேத்திரத்தில் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஆலயங்களில் சிவபூதவராயர் ஆலயமும் ஒன்றாகும். இந்த ஆலயம் ஏறத்தாழ நூற்றாண்டு பழமை வாய்ந்தது என்றால் அது மிகையாகாது.

இவ்வாறு பழம்பெரும் பெருமையை தன்னகத்தே கொண்டு விளங்குகின்ற இந்த ஆலயத்தில் பழமைக்கு மெருகூட்டும் முகமாக ஆண்டாண்டு காலமாக அதுவும் ஒன்றல்ல இரண்டல்ல அறுபது ஆண்டு காலமாக சிறப்பாக இயங்கி வருகின்ற திருவெம்பாவைக் கூட்டுப் பிரார்த்தனை சபை இறுதி நாள் வைரவிழா நிகழ்வை கொண்டாடுகின்றது.

பிரார்த்தனை மூலம் இறைவனை அடையலாம் என்பது எமது சமய நம்பிக்கையாகும். அது தனியான பிரார்த்தனையாகவோ அல்லது பலர் சேர்ந்த கூட்டுப் பிரார்த்தனையாகவோ அமையலாம். தனியான பிரார்த்தனையை விட பலர் சேர்ந்து வழிபடும் கூட்டுப்பிரார்த்தனை வலிமை மிக்கது என்பதை மேல் நாட்டவர்களே ஒப்புக் கொண்டு இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட பலர் அடங்கிய கூட்டுப் பிரார்த்தனைக்கு சபை அமைத்து அதனைக் கட்டுக்கோப்புடன் சிறப்பாக செவ்வனே பன்னாலை வாழ் பக்த சீலர்கள் நடத்தி வருகின்றார்கள் என்றால் அதனைச் சொல்ல வார்த்தைகளை யான் தேடவேண்டியுள்ளது.

சாதாரணமாக ஒருவருடத்தில் தானும் கொண்டாடுவது சிரமமான காரியமாக இருக்கும் இக்கால கட்டத்தில் இந்தச் சபை இதனைக் கொண்டாடுவதில் இருந்து இந்த ஊர் மக்கள் சமயத்தை எவ்வாறு தம் கண்ணைப் போற்றுகின்றார்கள் என்பதும் அதற்கு உறுதுணையாக இச்சபையானது எவ்வளவு தூரம் கஷ்டப்பட்டிருக்க வேண்டும் எத்தனை இடர்களை தாங்கி ஏறுநடை போட்டிருக்க வேண்டும் என்பதை நினைக்கும் பொழுது இந்த கூட்டுப்பிரார்த்தனை சபை தங்கள் ஊரில் அமைந்தமை பற்றி பன்னாலை வாழ் மக்கள் பெரிதும் கொடுத்து வைத்தவர்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் காண்கின்ற பொருட்களில் பொன்னும் மணியும் முத்தும் உயர்ந்தவையாகும். இப்பொன் நீ, இம்மணி நீ, இம்முத்து நீ என்றும் பொன்னே, மணியே என்றும் இறைவனைப் பற்றிப் பாடல்கள் உள்ளன. பொன்னிலும் மணி உயர்ந்ததாகும். மணியிலும் முத்து உயர்ந்ததாகும். உலகியலிலும் ஐம்பதாம் ஆண்டில் பொன்விழாவும், அறுபதாம் ஆண்டில் மணி (வைர) விழாவும் எழுபத்தைந்தாம் ஆண்டில் முத்து (பவள) விழாவும் கொண்டாடுகிறார்கள். பொன் மணி, முத்து மூன்றும் ஒன்றுக்கொன்று உயர்வு உடையன.

அதுபோல ஐம்பதாவது ஆண்டு விழாவை கொண்டாடி பொன்னாக மிளிர்ந்த இந்த கூட்டுப்பிரார்த்தனை சபையானது தற்பொழுது மணியாக உயர்ந்து நிற்கின்றது இது மேலும் முத்தாக உயர்ந்தும் பின் நூற்றாண்டு விழா காண வேண்டும் என்று எல்லாம் வல்ல எம் பெருமானின் பாதார கமலங்களைத் தொழுது அடியேனது இவ்விருப்பம் நிறைவேற எம்பெருமான் அருள்புரிவார் என்ற நம்பிக்கையுடன் நிறைவு செய்கின்றேன்.

'' மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழை வாயிலில்......

## எமது சபையின் வரலாற்றுப் பின்னணி:-

1938 ஆம் ஆண்டு திருத்தல யாத்திரைக்காக தென்னிந்தியா சென்று பாடல் பெற்ற தலங்கள் பலவற்றைத் தரிசித்து வருங்கால் சிதம்பரத்தில் தங்கியிருந்த பொழுது ஆசிரிய மணி திரு. கா. கதிர்காமத்தம்பி அவர்கள் அவ் வாலய வீதிகள் தோறும் ஆண்களும் பெண்களும் தனித்தனிக் கூட்டங்களாகப் பஜனை செய்து வருவதைக் கண்டார்கள். ஏன் இப்படி ஒரு வழிபாட்டை எமது கிராமத்திலும் செய்யக் கூடாது என எண்ணி னார்கள். நாடு திரும்பியதும் சித்தாந்த சாகரம் திரு. வி. சங்கரப்பிள்ளை, இளைப்பாறிய அதிபர் திரு. வை. பொன்னையா, திரு. வி. விஜயரத்தினம் முதலாய பெரியோர்கள் பலரையும் இளைஞர்களையும், மாணவர்களை யும் ஒருங்கிணைத்து எமது பன்னாலை திருவெம்பாவைக் கூட்டுப்பிரார்த் தனைச் சபையை உருவாக்கி அதன் மூலம் 1939 ஆம் ஆண்டு மார்கழி மாதம் திருவெம்பாவைக் கூட்டு வழிபாட்டினை ஆரம்பித்து வைத்தார் கள்.

அது முதல் ஆண்டு தோறும் திருவெம்பாவைத் தினங்கள் பத்திலும் தொண்டர் குழாத்தினர் ஒருவரை ஒருவர் துயிலெழுப்பி ஆசார சீலராய் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, சிவபுராணம் ஆதியாம் அருமறைகளை சங்கு, சேமக்கலம், மணி, தாளம், சுருதி முதலியன சகிதம் கிராம வீதிகள், ஆலயங்களைச் சூழ்ந்து பக்தி பிரவாகிக்கப் பண்ணோடு இசைபாடி வந்தார்கள். அன்று முதல் இன்று வரை எமது கிராம மக்கள் இவ்விறை கைங்கரியத்தின் ஆர்வ மீதூரப் பங்கு பற்றி வருவதுடன் பல்லாற்றானும் ஆதரவும் நல்கி வருகின்றமையும் குறிப்பிடற்குரியன. இடையிற் சில ஆண்டுகள் அனர்த்தங்கள் காரண மாக இப்பணியை இயற்ற முடியாதிருந்தமைக்காக மனம் மிக வருந்து கின்றோம்.

பன்னாலைக் கிராமத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கற்பக விநாயகர், சொரிகுடைப்பதி சிவபூதராயர், திருநீச்சரம் சுப்பிர மணியர் அடியார் திருமடச் சிவகாமி சமேத நடராசர், மயிலையம்பதி ஞான வைரவர், வல்லுவத்தை கந்தஞான வைரவர், விழிசிட்டி வீரபத் திரர் ஆகிய தெய்வங்களின் வீதி வழியாக இக் கூட்டு வழிபாடு நடை பெற்று வருகின்றது. அடியார்கள் அதிகாலை வேளையிலே மழையென் றும் பனியென்றும் பாராது நீராடி நீறாடி ஆசார சீலராய் பக்தி பிர காசிக்கப் பாடி வருங்காட்சி பார்ப்போரைக் பரவசத்தில் ஆழ்த்தும் பாண்மை கொண்டது. இவ் வழிபாட்டில் பங்குபற்றியோர் பலர் கல்வி மான்களாகி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புப் பெற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுச் சீரும் சிறப்புமாக வாழத் திருவருள் பாலித்துள்ளமை யாவரும் அறிந்த உண்மை. இன்றும் எமக்கு உதவி வரும் அவர்களுக்கு என்றும் அருள் புரிய இறைவனை வேண்டுகின்றோம். ஏனைய எங்கள் கிராமத் தவர்களும் வைகறையில் துயில் நீத்து எமது அடியார்களை வரவேற்று தேநீர், சிற்றுண்டி வகைகள் தந்து ஊக்கமும் உற்சாகமும் அளித்துப் பொருளுதவியும் புரிந்து வருவது இறைபணியில் அவர்களுக்கிருக்கும் ஆர் வத்தை அறியத் தருகின்றது. அவர்கள் வேண்டுவன வேண்டியாங்கு இறையருள் பாலிப்பதாக.

1963 ஆம் ஆண்டு இக் கூட்டுவழிபாட்டில் பங்கு கொண்டு திருவெம் பாவை ஓதி வரும் பொழுது விழிசிட்டி வீரபத்திரர் ஆலயத் திருமஞ்சக் கிணற்றில் தவறி விழுந்து அகால மறைவுற்ற செல்வன் கா. வி. கணேச மூர்த்தி என்பவருக்கு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, இரங்கற் கூட்டம் என்பன நிகழ்த்தி அன்னாரின் குடும்பத்தாருக்கு நிதியுதவியும் புரிந்தோம். அத்துடன் அவ்வமரரின் நினைவாக 'திருமுறைத் திரட்டு' என்ற நூலை யும் இலவசமாக வெளியிட்டுக் கௌரவித்தோம்.

ஆன்மீக ஈடுபாடு கொண்ட ஒரு சற்சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் பாலர் முதல் உயர்தரம் வரையுள்ள மாணவர்கள் பங்கு கொள்ளத் தக்க வகையில் நான்கு பிரிவுகளை ஏற்படுத்தி நாவண்மை, மனனம், பண்ணிசை, கட்டுரை, கோலமிடல், திருமாலை புனைதல் துறைகளில் போட்டிகளை நடத்தி ஒவ்வொரு போட்டியிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்குச் சான்றிதழ்களுடன் பெறுமதி வாய்ந்த நூல்களும் பரிசில்களாக வழங்கப்பட்டன. அத்துடன் அடுத்த தரத்தினர்க்கு ஊக்குவிப்புக் கருதி ஆறுதற் பரிசில்களும் வழங்கப்பட்டன. சீரற்ற நாட்டுநிலை காரணமாக மேற்குறித்த போட்டிகளை தொடர்ந்து நடத்த முடியாதமையை எண்ணி வருத்தமுறுகின்றோம்.

**மலர் வெளிபீடு:—**

பன்னாலை திருவெம்பாவைக் கூட்டுப் பிரார்த்தனைச் சபையின் வைர விழாவை நினைவு கூரும் வகையில் உருவாகும் இம் மலர் இந் நன் நாளில் வெளிவருவது பொருத்தமானதும் மகிழ்ச்சிக்குரியதுமாகும். திரு வெம்பாவை நாயகரான நடராசப் பெருமான், சிவகாமியம்மை சமேத ராக நூலாசிரியரான மாணிக்கவாசக சுவாமிகளுடன் அட்டைப் படத் தில் காட்சி தருவது அருங்காட்சியாக அமைந்துள்ளது. இம் மலரின் முன் இதழ்களில் குருமஹா சந்நிதானம், ஆதினகர்த்தாக்கள், சைவச் சான் றோர்களின் ஆசியுரையும் பின் இதழ்களில் சித்தாந்த வித்தகர்கள் பண்டி தர்கள், சைவப்புலவர்கள் ஆகியோரின் கட்டுரைகளும் மணம் பரப்பு கின்றன. அவை திருவெம்பாவை பற்றியும் திருவாசகம் பற்றியும் பாங் குறப் பகரும் வகையால் எமது சபையின் நோக்கினை நிறைவு செய் கின்றன. உருவத்தால் சிறியதே யாயினும் திருவாசகம் என்னும் தேன் சொட்டும் பாங்கால் இம் மலர் இறை நாட்டங் கொண்ட உள்ளங்களுக்கு ஓர் அரு மருந்தெனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்:-

சைவம் சிறக்கவும் எங்கள் சபை தழைக்கவும் உழைத்துயர்ந்தவர்களைக் காலத்திற்குக் காலம் போற்றிக் கௌரவிப்பது எமது சபையின் வழமை. அதற்கமைய எல்லாப்படியாலும் எண்ணிப் பார்ப்பினும் எங்கள் போஷகராகவிருந்து எம்மை நெறிப்படுத்திய மூதறிஞரான சித்தாந்த சாகரம் உயர்திரு. வி. சங்கரப்பிள்ளை அவர்களும் எங்கள் தலைவராக இருந்து எங்களை வழிப்படுத்திய உயர்திரு வை. பொன்னையா அவர்களும் திரு. சு. சண்முகநாதன் அவர்களும் இவ் வைர விழாவிற் கௌரவிக்கத் தக்கோர் ஆவர். அப் பெரியார்கள் இன்று வேற்றிடம் புக்கிருப்பதனால் தக்க தருணம் வருங்கால் அவர்களைக் கௌரவிக்கலாம் எனக் கருதி அவர்களுக்கு அடுத்த நிலையில் இன்று எங்களுடன் இருந்து சேவை புரியும் இருவரைக் கௌரவிக்கக் கருதினோம்.

அவர்களில் ஒருவர் திரு. வே விஜயரத்தினம் அவர்கள். அன்னார் எமது கூட்டுப் பிரார்த்தனைச் சபையின் ஆரம்ப காலத்தில் இளைஞராக இணைந்து கூட்டு வழிபாட்டில் பங்கு கொண்டு பணியாற்றியும் பிற ஆலயப் பஜனைகளிலும் கிராம முன்னேற்றச் செயற்பாடுகளிலும் பங்கு கொண்டும் சிறப்புறச் சேவையாற்றிய சீலர் ஆவர். அன்னாரை இப்பெரு விழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதில் பெருமிதம் அடைகின்றோம்.

அடுத்தவர் சைவம் சிறக்கப் பாடுபட்டுத் 'தொண்டர்' என்னும் பட்டமும் பாராட்டும் பெற்றவரும் தனது மாணவப் பராயம் முதற் கொண்டு எம்முடன் இணைந்து ஐம்பதாண்டுகளாக எமது சபையின் வளர்ச்சிக்கு பல்லாற்றானும் பாடுபட்டுழைத்த திரு. சி சிவபால சுப்பிரமணியம் அவர்கள் ஆவர். பண்ணிசையில் மாத்திரமல்லாது சித்திரக் கலையிலும் வல்லவர் என்பதற்கு அவரால் வரையப்பெற்ற இம் மலரின் அட்டைப்படம் சுட்டியம் கூறுகின்றது. அன்னாரின் ஓவியங்கள் பல திருக் கோயில்களை அலங்கரிக்கின்றன. பல்கலையும் வல்ல அன்னாரின் சேவைகளைப் பாராட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதில் இவ்விழாப் பெருமை பெறுகின்றது. இவ்விருவரும் எல்லாவளங்களும் பெற்று வாழ் வாங்கு வாழ்ந்து மேலும் பல தொண்டுகள் புரிய எல்லாம் வல்ல சிவகாமி சமேத நடராசப் பெருமான் நல்லருள் புரிவாராக

**நன்றி:-**

இம் மலர் சிறந்து மணம் பரப்ப ஆசியுரைகள் கட்டுரைகள் வழங்கிய சான்றோர்க்கும் அட்டைப்படத்தை அழகுற வரைந்து உதவிய 'தொண்டர்' திரு. சிவபாலசுப்பிரமணியம் அவர்களுக்கும் இம்மலரை அழகுற அச்சிட்டுதவிய கொக்குவில் பராசக்தி பதிப்பகத்தாருக்கும் இம்மலரை ஒப்பீடு செய்த வழுவின்றி அமைய உதவிய மலர்க்குழுவுக்கும் விழாக்குழுவுக்கும் எமது சபையின் உள்ளங்கனிந்த நன்றியை உரித்தாக்குகின்றோம்.

**மலர் ஆசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலை இளைப்பாறிய அதிபரும்,
திருவெம்பாவைக் கூட்டுப்பிரார்த்தனைச் சபை போஷகருமாகிய

**திரு. கா. கதிர்காமத்தம்பி அவர்கள் வழங்கிய**


# வாழ்த்துரை

''பாடும் பணியே பணியாய் அருவாய்'' என்பது அருணகிரிநாதரின் அருள்வாக்கு. பாடும் பணிக்கு முழுமையாக ஒதுக்கப்பட்ட மாதம் மார்கழி. மார்கழித் திருவாதிரை உலகமெங்கும் வாழும் இந்துக்களால் பண்டு தொட்டு கொண்டாடப்படும் ஒரு திருநாளாகும். சிதம்பரத்தில் திருவாதிரைக் காட்சி மிக அற்புதமானது. இறைவன் பால் மனம், வாக்கு ஆகியவற்றை ஒரு வழிப்படுத்துதலே வழிபாடு ஆகும். இதற்கு கூட்டுப் பிரார்த்தனை இன்றியமையாததாகும். இந்துக்கள் வைகறையில் எழுந்து ஸ்ஞானஞ் செய்து ஆசார சீலராக சுறுசுறுப்புடனும் பய பக்தியுடனும் மாணிக்கசுவாமிகள் அருளிச் செய்த திருவாசகப் பாடல்களை கூட்டுப் பிரார்த்தனையாக பாடுவதன் மூலம் நற்பேறு அடைகின்றார்கள்

எங்கள் கிராமத்தில் விநாயகர் ஆலயம், சிவபூதராயர் ஆலயம், பாலசுப்பிரமணியர் ஆலயம், ஞான வைரவர் ஆலயம், என 5 ஆலயங்கள் உண்டு. ஓர் ஆலயத்தில் தொடங்கி கிராமத்தில் உள்ள எல்லா வீதிகள் வழியாகவும் நடை பஜனையாகச் சென்று எங்கள் திருவெம்பாவைக் கூட்டுப் பிரார்த்தனைச் சபையினர் கூட்டுப் பிரார்த்தனையை நடத்தி வருகின்றனர். இதற்கு ஊர் மக்களும் பூரண ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர். இவ்வாறு கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபட்டவர்கள் விவசாயம், கல்வி ஆகியவற்றில் சிறந்தும், அரச உயர் பதவிகளிலும், வெளிநாடுகளில் பல தொழில் வாய்புகள் பெற்றும் சீரும் சிறப்புமாக வாழ்வது குறிப்பாக எங்கள் கிராமத்திற்கும் பொதுவில் எங்கள் நாட்டிற்கும் பெருமை தரும் விடயமாகும்.

எங்கள் கூட்டுப்பிரார்த்தனைச் சபையினர் தொடங்கிய இப்பணியை இன்னல்களுக்கு மத்தியிலும் வருடந்தோறும் நடைபெற்று 50 ஆண்டுகள் நிறைவுற்ற பொழுது பொன்விழா மிகவும் சிறப்பாக கொண்டாடி பொன் விழா சிறப்பு மலரும் வெளியிட்டோம். பின்னர் நாட்டின் சீரற்ற நிலை காரணமாக மக்கள் இடம் பெயர்ந்த காலங்களிலும் தொடர்ந்த இப்பணி இப்பொழுது 60 ஆண்டுகள் பூர்த்தியாகி வைரவிழாக் கொண்டாடுதலும், மலர் வெளியிடுதலும் போற்றப்படக் கூடியதும், பெருமைபடக் கூடியதுமாகும். இந்தப் பணி மேன்மேலும் சிறப்புற்று பல்லாண்டு காலம் நடைபெற ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை, விண்ணுக்கொரு மருந்தை, வேதவிழுப் பொருளை கண்ணுக்கினியானை வணங்கி வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமி திருமடத்தில் இருந்து வீதியுலா வருதல்



பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திரு.கா.கதிர்காமத்தம்பி அவர்களுக்கு பொன்னாடை போர்த்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

சபைத் தலைவர்

## திரு. சி. சிவபாலசுப்பிரமணியம் (தொண்டர்) அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

''புவனியிற் போய்ப் பிறவாமையினால் நாள் நாம் போக்கின்றோம் அவமே இந்தப் பூமி'' என்று, தேவர்களும் வந்து பிறக்க ஆசைப்படும் அளவுக்கு இறைவனை அடையும் வாய்ப்புக்கள் பலவற்றைக் கொண்டது எங்கள் பூமி. எங்கள் பூர்வ புண்ணிய பலத்தால் இந்தப் பூமியும் மானுட சரீரமும் எமக்கு அரிதிற் கிடைத்தவை. ''இந்தச் சரீரத்தை இறைவன் எமக்குத் தந்தது தன்னை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டே யாம்'' என்கிறார் நாவலர் பெருமான். இறைவனை வணங்கி முத்தி இன்பம் பெறுதற்கு இலகுவான வழி பக்தி நெறியே என்கிறார் மாணிக் கவாசக சுவாமிகள். ''பக்தி வலையிற் படுவோன் காண்க'' என்று அவர் காட்டும் நெறி தன்னை இறைவனுக்கு அளித்து இறைவனைத் தான் பெற்றுக் கொண்ட அனுபவ நெறி பக்தி நெறிக்குப் பயன் மிகத் தரு வது பாராயணங்களாகும். பாரயணங்கள் பல உள எனினும் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தம் அளிப்பது திருவாச கமே ஆகும். '' திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உரு கார்'' என்பது ஆன்றோர் வாக்கு திருவாசகத்தினுள்ளும் இறைவன் பெரிதும் உவந்தது திருவெம்பாவையே என்பது 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்று இறைவன் மணிவாசகருக்குப் பணித்ததிலிருந்து பெறப்படுகின்றது

திருவெம்பாவையானது தொழுவார்வினை களை வழுவா வண்ணம் அறுத்தருளும் திருவெண்ணாமலைத் தொல்பதியில், கன்னிப் பெண்கள் சிவபக்தியிற் சிறந்த சான்றோரைத் தம் கணவராக அடைய வேண்டும் என்று அவாவிப் பாடியதாக இலக்கியச் சுவை சொட்டும் புறப் பொரு ளைத் தரினும் ஆன்மாக்கள் பிறவித்தளை நீங்கி இறைவனைத் தலை வனாக அடைந்து பேரின்பம் தரும் முத்தியின்பத்தை அடையக் கருதும் சைவசித்தாந்தக் கோட்பாட்டை உட்கிடையாகக் கொண்டதாகும்.

பாருந்தோறும் பக்திச்சுவை சொட்டி முத்தியின்பமும் தரவல்ல அரு மறையாம் திருவெம்பாவையை கடந்த அறுபது ஆண்டுகளாகப் பாடிப் பரவி இறைபணி மேற்கொண்டு இன்று வைரவிழாக் கொண்டாடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இவ்வாறு இறைபணி இயற்றி மண்ணிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பிறந்தார் பெறும் பயனை நாமும் பெற்றுய்யும் வண்ணம் ஓர் எண்ணத்தை தனது திருநடனம் காணச் சென்ற எங்கள் பழவடியார் உயர் திரு. கதிர்காமத்தம்பி ஆசிரியர் அவர்களின் எண்ணத்திலே சிதம்பரத்திலேயே கருவாக்கி எமது பன்னாலைக் கிராம மண்ணிலே திருவெம்பாவைக் கூட்டுப் பிரார்த்தனைச் சபையாக உருவாக்கி வளர்த்து எம்மை உய்ய ஆட்கொண்டருளிய சிவகாமி சமேத நடராசப் பெருமானின் திருவருளை வியந்து போற்றி அவர் தம் திருவடிகளில் இம் மலரைச் சமர்ப்பித்து மேலும் இடையறாது இப்பணி தொடர தொடர்புடைய தொண்டர்கள் எல்லோர்க்கும் எல்லா நலன்களும் அருளப் பிரார்த்திக்கின்றோம்.

போதலர்ந்து தேன்சொரியும் பொன்னம் பலத்திலுறை
வாதவூர் எங்கோமான் வாசகத்தை – ஓதிப்
பிறவிப் பிணிநீக்கிப் பேரின்ப வெள்ளச்
செறிவுக்குள் செல்வர் சிறந்து.


'' பாடும் பணியே பணியாய் அருள்வாய் ''

'' இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க. ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன் விழா நிகழ்வின் போது மங்கல விளக்கேற்றுபவர்
திரு. சி. சின்னத்தம்பு **J. P.** (இளைப்பாறிய தபால் அதிபர்)



பொன்விழா நிகழ்வின்போது வரவேற்புரை வழங்குபவர்;
திரு. சி. சிவபாலசுப்பிரமணியம் தொண்டர் (சபைச் செயலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

பன்னாலை திருவெம்பாவைக் கூட்டுப் பிரார்த்தனை சபை
போஷகர், சைவ சித்தாந்த ஆசிரியர்
**உயர்திரு. வி. சங்கரப்பிள்ளை அவர்கள்**
வழங்கிய

# வாழ்த்துரை

பன்னாலை திருவெம்பாவை கூட்டுப் பிரார்த்தனை சபை வைர விழா மலருக்கு வாழ்த்துரை வழங்க நேர்ந்தமை மகிழ்ச்சிக்குரியது.

## மார்கழித் திருவாதிரைத் திருநாள்

பஞ்ச கிருத்தியங்களை நடாத்தும் நடராஜப் பெருமானுக்கு திருவாதிரைத் திருநாள். மிகவும் உகந்தது. ஆதிரை நாள் உகந்தான்'', ''ஆதிரையாய்'' ''ஆதிரையான் கண்டாய்'' ''ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்'' என்றெல்லாம் திருமுறைகளில் பேசப்படுவது கவனிக்கத்தக்கது

மார்கழி மாதம் தேவுக்களுக்கு உஷாக் காலமாகும். உஷாக்கால வழிபாடே சிறந்தது. எங்களுக்கு உஷாக்காலம் வைகறை. திருவாதிரை நாளை இறுதியாகக் கொண்ட பத்து நாட்களும் நடராஜப் பெருமானுக்கு திருவிழா நடத்தப்படுகின்றது. திருவாதிரைத் திருநாளில் தேவராதியோருங் கூட்டங் கூட்டமாக வந்து தெருக்களில் நிறைந்து நின்று தில்லை நடராஜப் பெருமானை, தொல் புகழ்களைப் பாடி பரவுவார்கள். ஆனந்தக் கூத்தாடி மகிழ்வார்கள். அப்பொழுது தரிசனத்துக்காக தேவர்கள் யாவரும் வந்து விட்டார்களா? இல்லையேல் வந்தவர்கள் யார்? வராதவர்கள் யார்? என்றெல்லாம் கூடக் கணக்கிடப்படுமாம்.

''ஆரார் வந்தார் அமரர் குழாத்தின்
அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.''

சேந்தனார் - திருப்பல்லாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவெம்பாவை பதிக வரலாறு

மாணிக்கசுவாமிகள் அருளிய திருவாசகப் பதியங்களில் திருவெம்பாவை ஏழாவது பதிகமாக அமைந்துள்ளது.

''அன்றுலத் தென்னை யாளு மணி வண்ணா மலையாய் போற்றி
என்றுதம் பரிவாலேத்தி யிறைஞ்சியங் குறையு நாளில்''

''மாதர் கொண் மாதரெல்லாம் மார்கழித் திங்க டன்னில்
ஆதிரை முன்னீரைந்தே யாகிய தினங்க டம்மின்
மேதகு மனைகடோறும் மழைத்திருள் வடிவ தான
போதிவர் தம்மிற் கூடிப் புனற்றட மாடல் செய்வார்''

''அன்னவ ரியல்பு கண்டா ராங்கவர் புகன்றதாக
மண்ணிய திருவெம் பாவை வாசகம் பேசி.''

என்ற திருவாதவூரடிகள் திருப்புராணத்தால் திருவெம்பாவை திருப்பதிக வரலாறு விளங்க இருக்கிறது

படைத்தல் தொழிலுக்குரிய காலம் காலையாதலாலும் ஒடுங்கிய முறையே தோன்றும் என்ற கருத்துப்படி உலக தோற்றத்திற்குக் காரணமாயிருந்த நவசக்திகளுள் ஒன்றையொன்று எழுப்பும் முறையில் இப்பதிக பாடல்கள் அமைந்திருக்கின்றமையால் சிருட்டித் தொழிலைக் குறிக்கும் இப்பதிகம் பஞ்ச கிருத்தியம் புரியும் நடராஜப் பெருமானின் திருநாட்களில் ஓதப்பெறுவது பொருத்தமானதே. இக் கருத்துப் பற்றியே திருவெம்பாவை காலத்து, சிவாலயங்கள் தோறும் திருவெம்பாவைப் பதிகம் ஓதப்படுகின்றது.

## திருவெம்பாவை பொருளடக்கம்

திருவெம்பாவைத் திருப்பதிகம் ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியாகவும், முன்னைப்பழம் பொருளாகவும், பின்னைப் புதுமைக்கும் போற்றும் அப்பெற்றியனாகியும், பாதாள மேழினுங் கீழ்ச் சொற் கழிந்து நிற்கும் பாதமலரையும் எல்லாப் பொருள் முடிபினும் மேலாய போதார் முடியையும் உடையவனாகியும், மாலறியா நான்முகனும், காணாத மலையாகியும், ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தனாகியும், தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தனாகியும், உய்வார் யாவர்க்கும் உய்யும் வகையெல்லாம் பெற்று உய்ந்தொழியுமாறு உலகத்தையும் காத்தும், படைத்தும், கரந்தும் விளையாடும் அருள் விளையாட்டையுடையவனாகிய செங்கணவன் திசைமுகவன் ஏனைத் தேவர்கள் முதலாய எவர்பாலும் இல்லாதொரு பேரின்பம் நம்பாலதாம்படி இவ்வுலகில் நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளித் தனது செங்கமலப் பொற்பாதத்தை தந்தருளும் சேவகனுமாகிய மாதேவனது வார்கழலையே

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட் கொண்டருளும் பொன்மலர்கள்"
என்று பலவாறாக போற்றி அவனது அருள் நீராகிய மார்கழி நீரில் ஆடும் அருட் திருப்பாடலாகும்.

''மலவிருளுற் றுறங்காமல் மன்னுபரி பாகரநன்
செலமிழுக வருகவெனச் செம்பல் திருவெம்பாவை''
— திருப்பெருந்துறைப் புராணம்

திருவெம்பாவை மரபு பன்னாலைக் கிராமத்தில் என்றும் நிலைக்க வேண்டும். சிவநெறி என்றும் செழிக்க வேண்டும் என்னும் கருத்தால் தற்போது ஓய்வு பெற்ற அதிபரும், சைவப் பெரியாருமாகிய திரு. கா. கதிர்காமத்தம்பி அவர்கள் இற்றைக்கு அறுபது ஆண்டுகட்கு முன் பன்னாலை இளைஞர்களை கூட்டி கூட்டுப்பிரார்த்தனைச் சபையை அமைத்து மார்கழி மாதத்து திருவெம்பாவைக் காலத்து விடியற்காலை, பன்னாலை வீதிகள் ஆலயங்கள் தோறும், திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவைத் திருமுறைகளைப் பக்தியோடு ஓதி கூட்டுப் பிரார்த்தனை செய்து வந்தனர். ஈற்று நாளான திருவாதிரைத் தினத்தன்று சிவபூதவராயர் ஆலயத்தில் திருவெம்பாவைக் கூட்டுப் பிரார்த்தனை விழாவாக கொண்டியும் வருகின்றனர்.

அக்காலத்து இளைஞர்கள் தற்போது முதியவர்களாய் வர அவர்களோடு பின் தோன்றும் இளைஞர்களும் பிரார்த்தனைச் சபையில் சேர அச்சபை வளர்மதிபோல் வளர்ந்து நிறைமதியாகி 1990 – 01 – 10 ந் திகதி திருவாதிரை நாளிலும் அடுத்த நாளிலுமாக இரு நாட்கள் பன்னாலை சிவபூதராயர் ஆலயத்தில் பொன் விழாவைச் சிறப்பாக கொண்டாடினர்.

தொடர்ந்து வழமைபோல் வருடா வருடம் திருவெம்பாவை கூட்டுப் பிரார்த்தனை செய்து வந்தனர் போர்ச் சூழல் காரணமாக பன்னாலை கிராம வாசிகள் 1992 ஆம் ஆண்டு புலம் பெயர்ந்துள்ளனர். அதனால் சில காலம் பிரார்த்தனை தடைப்பட்டிருந்தது தற்போது அங்கு மீளக் குடியமர்ந்த முதியோர், இளைஞர்களின் ஊக்கத்தால் கூட்டுப் பிரார்த்தனைச் சபை இயங்கி திருவெம்பாவை கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று 1999 – 12 – 23ந் திகதி வியாழக்கிழமை வைர விழாவைக் கொண்டாடுகிறது.

வைரவிழா சிறப்புறவும், அதன் சிறப்பம்சமாக விளங்கும் விழா மலர் நறுமணமாய் வீசவும், மேலும் திருவெம்பாவைக் கூட்டுப் பிரார்த்தனை சபை வளர்ந்து பவளவிழா காணவும் எல்லாம் வல்ல சிவகாம சுந்தரி சமேத சிற்சபேசனின் திருவருளை வேண்டி நல்லாசியைத் தெரிவிக்கின்றேன்.

''நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போஷகர்களில் ஒருவரும் முன்நாள் தலைவருமாகிய

## உயர்திரு. வை. பொன்னையா அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறு"

பன்னாலைப் பதியிலே கடந்த அறுபது ஆண்டுகளாகச் சைவசமய வளர்ச்சிக்கும், சைவசமய அநுட்டானங்களுக்கும், கூட்டுப்பிரார்த்தனைகளுக்கும் காத்திரமான பங்களிப்பை நல்கிவரும் எமது திருவெம்பாவைக் கூட்டுப் பிரார்த்தனை மன்றம் இவ்வருடம் வைரவிழாக் கொண்டாடும் நிகழ்வை யொட்டி வெளியிடும் வைரவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பி வைப்பதில் பெருமகிழ்வடைகின்றேன். இம்மன்றம் சைவசமய எழுச்சி பெற்ற ஒரு மன்றமாக வளர்ந்து வந்துள்ளது. ஆண்டு தோறும் நடைபெறும் மார்கழித் திருவெம்பாவை விழாவுக்கு முக்கியமளித்துத் திருவாதிரையை இறுதியாகவுள்ள பத்துத் தினங்களிலும் பன்னாலையில் அமைந்துள்ள ஏழு ஆலயங்களிலும் தொண்டர் அடியார் திருமடத்திலும் கூட்டுப்பிரார்த்தனை நடத்தியதையும், வழிபாடுகள் செய்தமையையும், ஆன்மீக சிந்தனைகளை வளர்த்தமையையும், மிகச் சிறப்பான பணிகளாகக் குறிப்பிடலாம் சைவத் திருமுறைகளுக்கும், சித்தாந்த சாஸ்திரங்களுக்கும் உரிய இடமளித்து வளர்த்து வந்த பெருமை இன்மன்றத்துக்கு உண்டு.

வருடம் தோறும் திருவெம்பாவைப் பத்துத் தினங்களிலும் அதிகாலை நான்கு மணி முதல் ஆறு மணிவரையமைந்த பிரம்ம முகூர்த்தத்தில் மேற்படி ஆலயங்களை உள்ளிட்ட வீதிகள் தோறும் ஆதியும் அந்தமுமில்லா அரும் பெருஞ் சோதியை மனத்திலே தியானித்துத் திருவெம்பாவைப் பாடல்களைச் சங்கு, சேமக்கலம் சகிதம் மக்கள் கேட்டுப் பரவசம் அடையும் அரிய வாய்ப்பை இம் மன்றத்தினர் ஏற்படுத்தியமை சைவசமய எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் ஒரு எடுத்துக் காட்டாகும்.

சைவத் திருமுறைகளையும் மெய்கண்ட சாத்திரங்களையும் போற்றுதற்கும் முன்னைப்பழம் பொருட்டு முன்னைப் பழம் பொருளின் புகழைப் பாடுதற்கும், சைவ வாழ்வு வாழ்வதற்கும் இம்மன்றம் நடைமுறைப்படுத்தி வந்த பணிகள் சாலச் சிறந்தவையெனலாம். மேற் கூறிய சமயப் பணிகள் மூலம் மக்கள் மனதில் சாந்தியையும் அமைதியையும் ஏற்படுத்தியன வெனின் மிகையொன்றுமில்லை

ஆன்றறிந் தடங்கிய சைவச் சான்றோர் பலரை இம்'மன்றம் தம் உறுப்பினராகக் கொண்டுள்ளது. அரசியல் நிலைமை காரணமாகவும் இயற்கையின் சீற்றம் காரணமாகவும், வேலை மாற்றம் காரணமாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் மன்றம் கடந்த காலங்களில் நலிவுற்ற வேளைகளில் இம் மன்றத்தின் இன்றைய தலைவர் உள்ளிட்ட செயற்குழு உறுப்பினரும், மற்றவர்களும் தோள் கொடுத்து உதவியமையை யாவருமறிவர் அவ்வாறே இன்றும் எமது கிராமத்தில் வதிந்து கொண்டு ''என்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்பதற்கேற்ப அவர்கள் ஆற்றிவரும் பணிகள் போற்றப்பட வேண்டியன வாகும்.

இத் திருவெம்பாவைக் கூட்டுப் பிரார்த்தனைச் சபையை 1939 ம் ஆண்டு ஆரம்பித்து வைத்து, அத்னைப் பேணிக்காத்து, அதன் பொன் விழாவைக் கண்டு, கௌரவிக்கப்பட்டுத் தற்போது கொழும்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் சைவப் பெரியார் திரு கா. கதிர்காமத்தம்பி ஆசிரியர் அவர்கள் ஆற்றிய சேவையும் வழிகாட்டுதலும் என்றும் போற்றுதற்குரியன. ஆரம்ப காலந் தொட்டு இப் பிரார்த்தனைச் சபையின் காப்பாளராக இருந்து வேண்டிய ஆலோசனைகளை வழங்கி வருடம் தோறும் திருவெம்பாவைக் காலங்களில் சைசித்தாந்தக் கருத்துக்களையும் அவற்றின் அருமை பெருமைகளையும் மக்கள் அறிய வேண்டி உணர்ச்சி பூர்வமாக நல்லுபதேசங்களை ஆற்றி இன்று கொழும்பில் வதியும் சைவசித்தாந்த வித்தகர் திரு. வி. சங்கரப்பிள்ளை ஆசிரியர் அவர்களின் பணியும் என்றும் போற்றுதற்குரிய தொன்றாகும். ஆரம்பகாலத்திலிருந்து இம் மன்றத்தில் பங்கு கொண்டு தொண்டாற்றும் வாய்ப்பினை இப் பெரியார்கள் எனக்கு நல்கியமை யான் செய்த பாக்கியம் எனக் கருதுகிறேன். இப் புண்ணிய ஞானப் பெருந்தகைகள் இருவரையும் சிரந்தாழ்த்தி வணங்குகின்றேன்.

இம்மன்றத்தில் பணியாற்றிய பலர் புலம்பெயர்ந்து இலங்கையின் பல இடங்களிலும் உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எங்கு சென்று வாழ்ந்து கொண்டிருந்தாலும் தங்கள் மன்ற சைவ விழுமியங்களைக் கைவிடமாட்டார்கள். அவர்கள் தம் நாளாந்த வாழ்வில் சமய அநுட்டானங்களையும் விரதங்களையும் கடைப்பிடிக்கத் தவறுவதில்லை அவ்வளவு இறுக்கமாக அவர்களைச் சைவ வாழ்வு வாழ இம் மன்றம் வளர்த்திருக்கிறது.

இம் மன்றத்திற் பங்கு கொண்டு பணியாற்றிய பெரியோர்களிற் சிலரும், இளைஞர் சிலரும் சிவகதியடைந்துள்ளனர். அவர்களின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போக! எம்கிராமத்தின் சகல ஆலைய சிவாச்சாரியார்களும், ஆதீனகர்த்தாக்களும், முகாமையாளர்களும் எம் கூட்டுப் பிரார்த்தனைகளுக்கும், வழிபாடுகட்கும் அதிகாலையில் ஆலயங்களைத் திறந்து வைத்துப் பூசைக்கு ஆவன ஒழுங்குகள் செய்து ஒத்தாசை வழங்கியமை எமக்கு ஓர் உந்து சத்தியாக விளங்கியது

எதிர் காலத்தில் இம்மன்றத்தின் நற்பணிகள் மென் மேலும் சிறந்தோங்கி விளங்க எல்லாம் வல்ல சிவகாமியம்பாள் சமேத நடராசப் பெருமானின் குஞ்சித பாதங்களை வழுத்தி வாழ்த்தி அமைகின்றேன்.

'' தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி அருள்மழையில் நீராடல்

மார்கழி மாதத்தில் அதிகாலையில் துயில் எழுந்து மற்றவர்களையும் துயில் எழிப்பிச் சென்று புனித தீர்த்தத்தில் நீராடிச் சிவபெருமானை வணங்குவதாகவும் அவ்வேளையில் பாடுவதாகவும் அமைந்தது மாணிக்க வாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவெம்பாவை.

முக்கியமாக மணமாகாத கன்னிப் பெண்களே தங்களுக்கு நல்ல கணவன் கிடைக்கவும், நாட்டுக்கு நல்ல மழை பொழியவும் வேண்டித் திருவெம்பாவை நோன்பை நோற்றார்கள் என்பதும் ஓர் கருத்து இப் போது எல்லா ஆலயங்களிலும் எல்லோரும் நோற்கும் நோன்பு இது. இங்கு மார்கழி நீராடல் முதன்மை பெறுகின்றது. மாதங்களில் மார்கழி தான் அதிக குளிர் நிறைந்த மாதம் அதுவும் அதிகாலை நேரம் மிகுந்த குளிர். அவ்வேளை நீராடுவதென்றால் நினைக்கவே குளிரும் காலம்

ஆனால் மார்கழியில் அதிகாலையில் நீராடினால் குளிர் அகன்று உடம்பு சூடாகி உற்சாகம் பிறக்கும் என்பதை அனுபவத்திற் கண்டோர் அறிவர். இதற்கு உபகாரமாயிருப்பது மனம் நீராடினால் குளிர் நீங்கும் எனும் மன உறுதியுடன் ஆடினால் குளிராது, ஐயோ குளிருது குளிருது எனப் பயந்து பயந்து நீராடினால் நடுங்கும்.

மன உறுதியுடன் நீராடினால் குளிர் நீங்கும், உடல் சூடாகும் அந்த நீரை இறைவனுடைய அருள்தீர்த்தம் அது உயிருக்குற்ற நோயாகிய பிறவிப் பிணியை நீக்கும் மருந்து எனும் உறுதியுடன் சிவநாமத்தை உச்சரித்துக் கொண்டு நீராடினால் அது வினைதீர்க்கும்.

"ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன் நற்றிலைச் சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன்...."

தான் நீராடும் தீர்த்தம் எனப்பாடுகிறார் மணிவாசகர். எனவே இவ் வழிப்பாட்டிலே மனம் முதன்மை பெறுகிறது

நாட்டுக்கு நல்ல மழை பொழிய வேண்டும். (அகால மழை அல்ல) என வழிபடும் அடியார் மனதில் அந்தமழை அருள்மழையாகப் பொழிகிறது

பேரானந்தக் கடலாகிய சிவத்தில் இருந்து தோன்றிய உமாதேவியாரின் நீலமேனி போல,மேகம் கடல்நீரை ஆவியாக்கி எடுத்து மேலெழுந்து கருமேகமாகிறது. எம்மை ஆட்கொள்ளும் அம்மையின் இடைபோல மின்னி; எம்பிராட்டியின் திருவடிகளில் உள்ள சிலம்பின் ஒலிபோல மேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழங்கி; அவளுடைய கண் புருவங்களைப் போல வானவில் தோன்றி; சக்தியும் சிவமுமாய பரம்பொருள் பக்குவ ஆன்மாக்களுக்கு அருள் சொரிவது போல மழையே நீ பொழியாய் என வேண்டுகிறார்.

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன் அம் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலை குலவி நம் தம்மை ஆள் உடையாள்
தன்னில் பிரிவு இலா எம் கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன் காக்கும் இன் அருளே
என்னப் பொழியாய் மழை ஏல் ஓர் எம்பாவாய்.

மழை உடலுக்கு உணவை ஆக்கவும்; உணவு ஆகவும் உதவுகிறது. இறைவனின் அருளாகிய மழை உயிருக்கு ஊட்டமாகிப் பிறவிப் பிணியை நீக்கிப் பேரானந்தத்தைத் தருகிறது.

உடல் வாழ்வுக்கு வேண்டிய மழையையும் உயிர் உய்திக்கு வேண்டிய அருளையும் ஒருசேரப் பெறுதற்குரியது மார்கழி நீராடல். இத்திருவெம்பாவைக் காலம் கிடைத்தற்கரியது; இக் காலத்தில் அதிகாலை நீராடலும், வழிபாடு செய்தலும் அரிதினும் அரியது இந்த அருமையுணர்ந்த பன்னாலைத் திருவெம்பாவைக் கூட்டுப்பிரார்த்தனைச் சபையார் 60 ஆண்டு காலம் தமக்கும் பிறர்க்கும் அருள்மழை பொழியச் செய்து வருவதைப் போற்றாதிருக்க முடியாது. போற்றுவோம், அவர்வழி நடப்போம், உய்வோம்.

**சைவப் புலவர் சு. செல்லத்துரை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவாய நம

திருவாசகமும் உபவேந்தர் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம்
பெரும் வணக்கத்துக்குரிய

**ஜி. யு. போப் ஐயர் M.A.D D அவர்களின்**

# ஆராச்சி பேர்குறிப்பு

சைவ உலகிற்கோர் திருவாசகம் என்னும் தேன் மெஞ்ஞான வீடடைய பெற்றவர் பெற்ற பெரும் பேரின்ப வழியாகும்.

திருவாசகம் சைவ் வழிபாட்டுக்கோர் முக்கிய நூலாயினும், ஒவ்வொருவரும் இந்நூலை பாராயணம் செய்து மான சீகமாக தியானித்து வாழ் நாள் ( முடிவில் ) இறுதியில் தில்லை வாழ் கூத்தரை சேர்வது திண்ணம்.

திருவாசகம் மேல் நாட்டவர்களுக்கு வீடுபேற்றினை அடையும் மார்க்கம் இருப்பது என்பது அவர்கள் கனவிலும் கண்டறிவார் இல்லை. இத்தகைய சூழ்நிலையில் 19ம் நூற்றாண்டில் தான் மேல் நாட்டவர்களுக்கு திருவாசக விளக்கங்கள் தெரிபட்டிருந்தன.

இங்கிலாந்தில் ஒக்ஸ்போட் பல்கலைக் கழக உபவேந்தர் வணக்கத்துக்குரிய ஜி. யு. போப் ஐயர் **M. A. D. D**. 1837ம் ஆண்டு சித்திரை மாதம் சென்னை துறைமுகம் வந்த பொழுது ஒரு பெரும் அதிசயத்தை காண நேர்ந்தது இவர் வந்த நோக்கம் கிறிஸ்தவ் மதத்தை போதிக்கவும் அதன் தத்துவத்தையும் பரப்ப வந்தவர்; தர்மபுர ஆதினம் அன்று திருமுறைகளை யானை முதுகினில் ஏற்றி ஊர்வலமாக வருவதை கண்டு வியப்படைந்தார். அங்கே இருந்தவர்கள் அவருக்கு விபரங்களைச் சொன்னார்கள்.

அதன் பின்பு அவர் தமிழ் இலக்கண இலக்கியங்கள் எல்லாம் ஐயம் திரியுற கற்று தமிழுக்கு ஒரு பொற்கால இலக்கண நூல் இயற்றி தமிழைச் சரளமாகப் பேசவும், எழுத்வும் பெரும் தமிழ் ஆசானாக திகழ்ந்தார். இவருடைய வாழ்க்கையில் 67 வருஷங்களாக தமிழை கற்று பெரும் விற்பன்னராக விளங்கினார். கிறிஸ்த்துவ மதத்தைப் பரப்ப இவருக்கு மனம் வரவில்லை. ஊசி காந்தத்தை அணுகியது போல் திருவாசகத்தில் நாட்டங் கொண்டார்.

இவருடைய காலத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் ஸ்ரீ சிதம்பரம் வடலூர் இராமலிங்கம் அடிகளோடு உறவாடிய பெருமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களோடு இணைந்த வாழ்வும், பேரானந்தமும் பெற்றார் மேலும் மனோன்மணியம் ஆசிரியர் சுந்தரம்பிள்ளையுடன் அளவு கடந்த அன் போடு திகழ்ந்தார்.

தென் இந்தியாவையும் சித்தாந்த கழகத்தையும் அவர் போற்றியிருக் கிறார் இவர் தனது தாய் நாட்டையடைந்து தனது பதவியில் இருக்கும் காலத்தில் திருவாசகத்தை ஆங்கிலேய மொழியில் எழுத வேண்டுமென உறுதி கொண்டார் அப்பொழுது அவருக்கு 77 வயது ஆகியது. தான் இதனை முடிப்பேனா என்று கலங்கினார். அப்பொழுது அங்கிருந்த ஒக்ஸ்போட் கழக வேந்தர் வணக்கத்துக்குரிய பேலியல் என்டவர் நீர் மொழி பெயர்த்து எழுதும் ஒன்றும் உமக்கு நேராது என்றார்.

திருவாசகத்தை மொழி பெயர்க்க துவங்கினார். இப்பணியில் ஈடு பட்டிருக்கும் காலையில் ஒரு சித்திரை மாதப் பௌர்ணமியில் ஒரு தோற் றம் கண்டு அந்த உருவம் வெள்ளாடை அணிந்து அவர் முன் தோன்றி அவரை ஆசீர்வதித்து மறைந்து போனதை குறிப்பிட்டு இருக்கிறார். அவர்தான் திருவாதவூரடிகள் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்.

திருவாசகம் 51 பதிகங்களைக் கொண்டது. இதனுடைய வரிகள் 3327 இத்தனையும் மொழி பெயர்த்து மேற்கு நாடுகளையும் கிழக்கு நாடுகளையும் பாலமாக இணைத்த பெருமையும் கீர்த்தியும் இவருக்கு உண்டு.

இவர் தனது கிறீஸ்தவ தேவாலயங்களில் பியாணோ வீணையும் திருவாசகம் ஒலிக்கும். உதாரணமாக திருவாசகத்தில் 45 பதிகம் ''யாத்திரைப் பத்து'' 5 ம் பாடல் ஆங்கிலத்தில் '' ஐயாம்பிக்டெற்றா '' மீற்றரில் பாடி மகிழ்வர் ஆனந்தப்படுவார்.

> விடுமின் வெகுளி வேட்கை நோய்
> மிக ஓர் காலம் இனி இல்லை
> உடையான் அடிக்கீழ் பெரும் சாத்தோடு
> உடன் போவதற்கே ஒருப்படுமின்
> அடைவோம் நாம் போய் சிவபுரத்துள்
> அணியார் கதவு அது அடையாமே
> புடைபட்டு உருகிப் போற்றுவோம்
> புயங்கன் ஆழ்வான் புகழையே.

இது ஆங்கில மொழிபெயர்ப்பு:—

> **Free ye your souls**
> **From pains of wrath and Lust**
> **Hens forth the time shall not be long drawn out**
> **Beneath the master's feet with Glad Acclaim**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

And that we in one may go in one combine
To sivan's town shall refuge find
Whose flowered wreath gates shall not be closed
And that we in ecstasy shall sing the glories of

" Puyangan King "

இப் பாட்டை பாடி மகிழ்வர்.

இவர் 1900 ஆண்டு சித்திரை மாதம் 22ம் திகதி திருவாசகத்தை மொழி பெயர்த்து வெளியீடு செய்தார் சிவம் இருந்து தில்லை நடராசர் திருக்கமலமடி சேர்ந்தார். இவர் தன்னை 'தமிழ் மகன்' என்றே தமது கல்லறையிலும் எழுதியிருந்தார். சைவசித்தாந்த கழகம் இவருடைய கல்லறையில் சலவைக் கல்லில் இவர் ஆற்றிய பெரும் பணியை பதித்தார்கள். இன்றும் அவை ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

இவருடைய திருவாசகத்தை பற்றிய ஆங்கிலேய குறிப்பு

" There are few poems in any language that can surpass Thiruvasagam, the holy word of Lord Manickavasagar in Profoundity of thought, simplicity in feeling, child like atmosphere, Finally find its shelter "

இத்தகைய பெரும் தொண்டும் போற்றுதற்குரியதுமான ஆங்கிலேயர் என்றால் நாங்கள் எங்கே நிற்கிறோம்.? என்பதை சிந்தியுங்கள்.

எழுதியவர் :-

திருவாசக மன்ற ஸ்தாபகரும்

திருவாசகமணி க. மாணிக்கவாசகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அன்பே சிவம்

# மார்கழி உதயம்

தமிழுக்கு அழகு செய்த பக்தி நூல்களில் திருவாசகமும் முதன்மை யானது. ''திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்'' என்ற சொல்லுக்கு இலக்கணமாக உள்ளத்தை உருக்குகின்ற உயிர்த் தன்மை வாய்ந்த கருத்துக்களால் கோர்க்கப்பட்ட பாமாலை திருவாசகம். திருவாசகத்தில் சிவப் பரம்பொருளின் மேன்மை கூறப்பட்டதோடு மட்டு மல்லாமல் மானிட வாழ்வியல்க் கருத்துக்களை மகத்தான பாணியில் மணிவாசகர் தமிழுலகத்திற்குப் படைத்தருளியுள்ளார் இத்தகைய அற்புதமான திருவாசகப் பாமாலை இப் புவிக்கு அளித்த மணிவாசகர் வாழ்ந்த காலம் இன்னும் திட்டவட்டமாக வரையறுக்க முடியாது. வரலாற்றாய் வாளர்களுக்குக் குழப்பமாகவுள்ளது.

பன்னிரண்டாம் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணத்தைப் படைத்த சேக்கிழார் அறுபத்துமூன்று நாயன்மாரது சரிதத்தைப் பாடி அரங்கேற்றிய போது அப்பாடல் தொகுதிக்குள் மணிவாசகர் தவறிப் போனது மர்மமாகவே உள்ளது. கால எல்லை எதுவெனக் கணிப்பிட முடியாவிட்டாலும் கருத்து எல்லையில் மணிவாசகரது திருவாசகத்திற்கு முன்னுக்கும் பின்னுக்கும் இல்லாத தனிச்சிறப்பு நூலாக தமிழுலகம் மதிக்கின்றது திருவாசகத்திற்குள் அடங்காதவை எதுவுமில்லை. இறைவனை எல்லா நிலையிலும் நின்று அன்பினால் விழித்து சொல்லினால் அனுபவித்தவர் மணிவாசகர். அவரது திருவாசகப் பாடலில் திருவெம்பாவையும், திருப்பள்ளி எழுச்சியும் தனித்துவமான இலக்கிய இரசனை உடையவை ஆதலால் பாரத எல்லையைத் தாண்டி திருவாகத்தின் இவ் எல்லைப் பகுதிகள் புனிதமானவையாய், புகழ் பூத்தனவாய் விளங்குகின்றன. இன்றைய தாய்லாந்து நாட்டில் கூட வருடம் தோறும் நடைபெறும் முடி சூட்டு விழாவில் திருவெம்பாவை ஓதப்படுகின்றதென்றால் அதன் சிறப்பினை, திருவாசகத்தின் பெருமையினை அகலச் சிந்திக்க வேண்டியது தமிழுலகின் கட்டாய கடனாகும்.

பண்டு தொட்டு தமிழ் மகளிர் மார்கழித் திங்களில் பாவை நோன்பு நோற்றனர். என்பதற்குப் பல பழந்தமிழ் நூல்கள் சான்று பகர்கின்றன. மகளிர் மார்கழி மாதத்தில் தம் மனம் நிறைந்த தோழியர்களோடு கூடி ஆற்றிலே நீராடி ''நல்லதோர் தலைவனுக்கு தாம் ஆட்பட வேண்டும்'' என பிரார்த்திப்பது வழமையென நூல்கள் எடுத்துரைக்கின்றன இம் மார்கழி நீராடலை ''தைந்நீர் ஆடுதல்'' என பண்டைய நூல்கள் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகின்றன. சங்க நூலாகிய பரிபாடலின் ஓர் இடத்தில்

"தாய் அருகா நின்று தவத்தைநீர் ஆடுதல்
நீரை உணர்த்தி வையை நதி"

என்று சொல்வதனூடாக மார்கழி தை நீராடல் மிகப்பழைமை யானான பண்பாட்டு மரபாக இருந்ததனை உணரலாம். கன்னிப் பெண்கள் ஒருவரை ஒருவர் துயிலெழுப்பி மார்கழி நீராடும் வாழ்வினை பெண்ணாக நின்று தன்னை மறந்து மணிவாசகர் திருவெம்பாவை என்ற பகுதிக்குள் இருபது பாடல்களை அற்புதமாகப் படைத்துள்ளார் ஆண்டாள் பாடிய திருப்பாவை பாடல்களின் தன்மை போல் மணிவாசகரின் திருவெம்பாவையும் அமைந்துள்ளது தோழிகள் தோழிகளோடு தோற்றமும் முடிவுமில்லா சிவப்பரம் பொருளின் பெருமையினை நினைந்து வரம் கேட்பதாக மணிவாசகர் திருவெம்பாவை பாடி முடித்துள்ளார். இப் பாவை பாட்டுக்குள் பக்தி, காதல், ஏக்கம், பரிதவிப்பு, நம்பிக்கை கருணை போன்ற பல வித உணர்ச்சிகள் அமைந்துள்ள சிறப்பினைக் காணலாம். மனித உணர்ச்சிகளுக்கு அப்பாலும் நாடு சிறக்க வேண்டும் நல்லன பெருக வேண்டும் என்ற பொதுப்பயன் கருதுகின்ற கன்னிப் பெண்களின் இயல்பான நல்லெண்ண வெளிப்பாட்டினையும் திருவெம்பாவைக்குள் காணலாம். இத் திருவெம்பாவைப் பாடல்களில் ஒவவொரு பாடலின் முடிவிலும் "எம்பாவாய்" என்ற சொல் அடியால் நினைவுபடுத்துவதனைக் காணலாம்.

இலக்கியச் சுவை நிறைந்திருக்கும் திருவெம்பாவைப் பகுதியில் பக்திச் சுவையோடு சைவசித்தாந்த தத்துவச் சுவையும் இருப்பதை அறிஞர்கள் புகழ்ந்துரைப்பர்.

ஆதியும் அந்தமும் இல்லா எனத்தொடங்கும் திருவெம்பாவையின் முதலாவது பாடலில் பரம்பொருளாகிய சிவபெருமானின் புகழினைக் கூறி அவரின் பெருமைதனைச் சிறப்புறக் கூறுகிறார். சிவனைப் புகழ்ந்து பாடிவரும் பாட்டொலி கேட்டு தோழி நீ இன்னும் விழித்தெழவில்லையோ உன் செவி வன் செவியோ மாதேவன் பெருமைகளைக் கூறும் எங்கள் ஒலி தெருவில் கேட்டு உள்ளம் நெகிழ்ந்து உணர்வு மிகுந்து மனம் கரைந்து தேம்பித்திகைத்து தன்னையே மறந்து விழுந்து புரண்டு கிடக்கும் எம் தோழியின் இயல்பை எண்ணிப்பாராயோ என்ற தன்மையில் அப்பாடல் அமைந்துள்ளது. சொல்லுக்கு அடங்காத பெரும் புகழுடைய இறைவனது பெருமைகளை,

"வேதமுதல் விண்ணோடும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா"

என ஒரு பாடலில் சுட்டிக் காட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பெருமையுடைய இறைவனை உள்ளம், உடல், உயிர் மூன்றாலும் ஆட்பட்டுருகும் சித்தம் அழகியாரின் சிறப்பியல்புகளைப் பல பாடல்களினூடாக எடுத்துக் காட்டுகின்றார், இயற்கையின் இயல்பை இறைவனின் இயல்பாகக் காட்டும் மணிவாசகரின் உவமானச் சிறப்பை திருவெம்பாவையின் பதினாறாவது பாடலிற் கண்டு மகிழலாம்.

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலை குலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எம்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன் அருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்

மேகம் கடல்நீரை முகர்ந்து கொண்டு வந்து மழையாகப் பொழிகின்ற அறிவியல் இயற்கையை இப்பாடலில் அபாரமான கற்பனைத் திறனோடு என்ன அழகாக மணிவாசகர் அமைத்துள்ளார். பொருள் விளங்கிப் படிப்பவர்கள் கடவுளின் கருணையினையும் மணிவாசகரின் கற்பனைத் திறமையினையும் கருத்திற் கொள்வர். இப்பாடலின் பொருளை விரிப்பின் மழை கடலைச் சுருக்கி கார்மேகமாக எழுந்து அக்கார்மேகம் இறைவியின் திருமேனி வண்ணம் திகழ்ந்து மிளிர்கின்றது. இடையிடையே மின்னுகின்ற மழைமேகம் எம்பிராட்டியினுடைய சிற்றிடைபோல் தோன்கின்றது. மழை மேகத்தின் இடிக்குரல் இறைவியினுடைய காற்சிலம்பொலி போல் ஓசை எழுப்புகின்றது. வானத்திலிருந்து பொழிகின்ற மழை வையகத்திற்கு வாழ்வு தர வருகின்ற அன்னையின் இன்னருள் போல் எல்லோர்க்கும் நல்ல நலம் தர பொழியாய் மழையே என அமைந்த பாடலின் கருத்து மிகுந்த இலக்கிய இரசனை கொண்டது. பக்தி மேலீட்டால் பாவையர்கள் பரமனிடம் உரிமையோடு கேட்கும் உறுதியினை ''என் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க'' என்ற திருவெம்பாவையின் பத்தொன்பதாவது பாடல் அடிகள் ஊடாக மணிவாசகர் பகருகின்றார்

உள்ளத்தை உருக்கி உயர்பக்தியை ஏற்படுத்துகின்ற மணிவாசகரின் மகத்தான வார்த்தைகளை திருவெம்பாவைப் பாடல்கள் முழுவதையும் கருத்தூன்றிப் படிப்பவர்கள் கருப்பொருள் அறிந்து இன்புறுவர் என்பது ஐயமில்லை.

திருவாசகத்தில் திருப்பள்ளி எழுச்சி என்னும் பத்துப் பாடல்களை திருப்பெருந் துறையில் இருக்கும் பரம்பொருள் தலத்தை மையமாக வைத்து மணிவாசகர் அமைத்துள்ளார். திருப்பள்ளிஎழுச்சி என்பதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்பொருள் திரு — தலைவன், பள்ளி — படுக்கை, எழுச்சி — எழுப்புதல் என்ற அடிப்படையில் எழுந்ததே ஆகும். பண்டைக் காலத்தில் போர்க் களத்தில் மாற்றாரை வென்று வாகை சூடி இல்லம் வந்து உறங்கும் தலை மகனை மகளிர் பலரும் கூடி துயில் எழுப்புவதை பண்டைய நூற் பாடல் கள் பலவற்றிலும் காணலாம். அவை புறத்திணைப் பாடல்களாகவும் அகத்திணையின் பால் எழுந்த பாடல்களாகவும் காண முடிகிறது. காலைக் காட்சியையும் தலைமகனின் தன்னிகரில்லா வீரத்தையும் மகளிர் தலை வன் மீது காட்டும் உள்ளன்பின் உணர்வுகளையும் பண்டைய துயிலெ டைப் பாடல்கள் வெளிக்காட்டின. இவ் வகையில் திருப்பெருந்துறை யிலுள்ள இறைவனை நினைத்து அவனைத் தலைமகனாக எண்ணி தலைமகளும் அவளைச் சார்ந்தோரும் துயிலெழுப்புவதாக பாடல் கருத் துக்கள் பகருகின்றன.

முதலாவது பாடலிலேயே போற்றி என் வாள்முதலாகிய பொருளே என்ற வார்த்தையினுள்ளே என்னுடைய இல்வாழ்வுக்கு மூலப் பொரு ளாக விளங்கும் தலைவா உன் திருவடியை மலர்கொண்டு தொழுவதற்கு துயிலெழுந்தருள்வாயா. என்ற கருத்தோடு பாடலை சுவைபட அமைத் துள்ளார்.

போற்றி என் வாழ் முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் (கு) இணை துணைமலர் கொண்டு
ஏற்றி நின் திருமுகத்து எமக்கு அருள் மலரும்
எழில் நகை கொண்டு நின் திருவடி தொழுகோம்
சேற்று இதழ்க் கமலங்கள் மலரும் தண் வயல்சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
ஏற்று உயர் கொடி உடையாய் எனை உடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

இம் முதல் பாடலுக்குள்ளேயே தலைவனை தலைவி அதிகாலை யின் முன் எழுந்து பாதக்கமலங்களைத் தொட்டு வணங்குகின்ற பண் பாட்டினையும் திருப்பெருந்துறை ஊரின் திருச்சூழல் தனையும், நாயக னின் வீரத்தினையும் விடிகாலையில் போற்றித் துதிக்கின்ற பெண்மை யின் பெருந்தன்மையினையும் மிக அழகாகக் கூறுகின்ற சுவை அற்புத மாக அமைந்துள்ளது. முதற் பாடலில் இருந்து நிறைவுப் பாடல் வரை இப் பள்ளி எழுச்சிப் பாடல்களில் இயற்கையின் அழகையும் இறைவனின் பேராற்றலினையும் பெண்மையின் மென்மையினையும் மிக நுட்பமாக அழகு தமிழில் அமைத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காவது பாடலில் திருப்பெருந்துறை எனும் பழம்பதியின் பக்திச் சூழலை காலைக் காட்சியூடாக சொல்லுகின்ற பாவரிக்குள் அக்கால இந்துக்களின் பண்பாட்டை பக்தி நிலையை கலைமிகுதியை நினைக்க நினைந்து கொள்ள வைக்கின்றார்.

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணை மலர்க்கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்....

மேலும் இறைவனின் பெருமையினைக் கூறுகின்ற போது உயர்ந்த தத்துவ சிந்தனையையும் இப்பாடல்களுக்குள் மணிவ்ாசகர் புகுத்தத் தவறவில்லை.

''முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் (று) அறிவர்'' என்ற அடிகளின் ஊடாக இறைவன் பற்றிய உயர்ந்த தத்துவ சிந்தனையை வெளிப்படுத்துகின்றார்.

'' எண்ணகத்தாய் உலகுக்(கு) உயிர் ஆனாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே''

என்ற ஒன்பதாவது பாடலின் நிறைவு அடி மேலும் இறைவன் பற்றிய தத்துவ சிந்தனையை சிந்திக்க வைப்பதனைக் காணலாம். ஈழ நாட்டிலும் சில ஆலயங்களில் பள்ளி எழுச்சிப் பாடல்கள் பாடி பூசை வழிபாடு தொடங்குவதை இன்னும் காணக் கூடியதாகவுள்ளது. மணிவாசகரின் திருப்பள்ளி எழுச்சி பொதுவாக மார்கழி மாதத்தில் தமிழும் சைவமும் வாழும் உலகமெல்லாம் பாடிப்போற்றுவது நீண்டகால வழமையாக உள்ளது. எனவே பக்திச் சுவையையும் பண்பாட்டு பாரம்பரியத்தையும் தருகின்ற உயர் இலக்கியமாக அமைந்த திருவாசகத்தில் திருப்பள்ளி எழுச்சி என்றும் பாடிப்போற்றிப் பேண வேண்டிய ஒன்றே.

செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன், பீ. ஏ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவிழா கண்டனை நீ வாழி வாழி

செந்தமிழ் மரபு பேணும்
    எம் தமிழ் நிலத்தில் முன்னோர்
சுந்தர விழாக்கள் கண்ட
    தூய்மையை மிகுந்து போற்றி
அந்தமிர் வாதவூரர்
    அன்றொரு நாளில் அண்ணா
மலையினில் கன்னிப் பெண்கள்
    மாண்பின் பாடல் கேட்டோம்.

அவ்வழி இன்று நாங்கள்
    அகத்தினை தூய்மை செய்து
செவ்வழி சிவனின் மேன்மை
    செகத்தினில் ஓங்கும் வண்ணம்
நல்வழி பலவும் பாடி
    நாடியே வாதவூரர்
சொல்லிய திருவெம்பாவை
    சுவையுடன் பாடினோமே.

கடுங்குளிர் பனி கொள் மாதம்
    கடவுளை பணிந்து பாடும்
நடுக்கமும் எம்மை வாட்ட
    நாடியே பாடியோர்கள்
அடுத்தடுத் தறுபதாண்டு
    அகவையைக் கண்ட பேருள்
பாடுவோம் இன்றும் நன்றே
    பாலர் நாம் திருவெம் பாவை.

சைவமும் தமிழும் வாழ
    சஞ்சலம் நீங்கி ஓட
கையது கூப்பிப் பாடும்
    களிப்பினில் மிதந்து நாங்கள்
பையவே பாடிப்பாடி
    பன்னாலை ஊரைச் சுற்றி
வைரமாம் உறுதி பொங்க
    வளர்ந்த நல் நிலைதான் வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தியில் பெருமை கூட்ட
    பன்னாலைப் பதியில் ஓங்கும்
பூதராம் எங்கள் தெய்வம்
    புகழினைப் பாடிப் பாடி
சத்திய வழியில் மேன்மை
    தளைத்திட வந்த சபையின்
சித்தமும் அறுபதாண்டு
    சிறப்பினை நினைவில் வைப்போம்.

நல்லெழில் வண்ணம் கூட்ட
    நாடியே மணிவாசகனார்
சொல்லிய பாடல் எல்லாம்
    சுவையுடன் பாடிப் பாடி
இவ் இடம் இழந்து நாங்கள்
    இருப்பிடம் விட்டு ஓடி
நல்வழி வந்த காலை
    நயம்பட எடுத்தோர் விழாவே.

இவ்விழா சிறப்பு காண
    ஈசனின் மைந்தர் பூதா
நல்லருள் நிலையை நாடி
    நலமுறப் பணிந்து பாடும்
சொல்லில் இனிக்கும் ஆண்டு
    சுவை தரும் அறுபதாண்டு
பல் ஒழித் தீபம் காணும்
    பகர் வைர விழாவே் வாழி.

பன்னாலை,
தெல்லிப்பழை.

செல்வி. வி. வினோதினி B.A.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

உ

மாணிக்கவாசக சுவாமிகள்

திருப்பெருந்துறையில் அருளிய

# திருப்பள்ளியெழுச்சி

போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூம்கழற்கு இணை துணை மலர் கொண்டு
ஏற்றி நின் திருமுகத்து எமக்கு அருள் மலரும்
எழில் நகை கொண்டு நின்திருவடி தொழுகோம்
சேற்று இதழ்க் கமலங்கள் மலரும் தண் வயல்சூழ்
திருப் பெருந்துறை உறை சிவபெருமானே
ஏறு உயர் கொடி உடையாய் எனை உடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 1.

அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம் நின் மலர்த் திருமுகத்தின்
கருணையின் சூரியன் எழ எழ நயனம்
கடிமலர் மலர மற்று அண்ணல்அம் கண் ஆம்
திரள் நிரை அறுபதம் முரல்வன இவை ஓர்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
அருள் நிதி தரவரும் ஆனந்தம் மலையே
அலை கடலே பள்ளி எழுந்தருளாயே. 2.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளி ஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்
தேவ நல்செறி கழல் தாள் இணை காட்டாய்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
யாவரும் அறிவு அரியாய் எமக்கு எளியாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே 3.

இன்இசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணை மலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண்டு இன்அருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 4.

பூதங்கள் தோறும் நின்றாய் எனின் அல்லால்
போக்கு இலன் வரவு இலன் என நினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டு அறியோம் உனைக் கண்டு அறிவாரைச்
சீதம் கொள் வயல் திருப்பெருந்துறை மன்னா
சிந்தனைக்கும் அரியாய் எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்து எம்மை ஆண்டு அருள்புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 5.

பப்பு அற வீடு இருந்து உணரும் நின் அடியார்
பந்தனை வந்து அறுத்தார் அவர் பலரும்
மைப்பு உறு கண்ணியர் மானுடத்து இயல்பின்
வணங்குகின்றார் அணங்கின் மணவாளா
செப்பு உறு கமலங்கள் மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
இப்பிறப்பு அறுத்து எமை ஆண்டு அருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 6.

அது பழம் சுவை என அமுது என அறிதற்கு
அரிது என எளிது என அமரரும் அறியார்
இது அவன் திருஉரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டு கொண்டு இங்கு எழுந்தருளும்
மது வளர் பொழில் திரு உத்தரகோச
மங்கை உள்ளாய் திருப்பெருந்துறை மன்னா
எது எமைப் பணி கொளும் ஆறு அது கேட்போம்
எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 7.

முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார்
பந்துஅணை விரலியும் நீயும் நின் அடியார்
பழம் குடில் தோறும் எழுந்தருளிய பரனே
செம் தழல் புரை திருமேனியும் காட்டித்
திருப்பெருந்துறை உறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டி வந்து ஆண்டாய்
ஆர் அமுதே பள்ளி எழுந்தருளாயே. 8.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொருளே உன தொழும்பு அடியோங்கள்
மண்ணகத்தே வந்து வாழச் செய்தானே
வண் திருப்பெருந்துறையாய் வழி அடியோம்
கண் அகத்தே நின்று களிதரு தேனே
கடல் அமுதே கரும்பே விரும்பு அடியார்
எண் அகத்தாய் உலகுக்கு உயிர் ஆனாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே 9.

புவனியில் போய்ப் பிறவாமையின் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு என்று நோக்கித்
திருப்பெருந்துறை உறைவாய் திருமால் ஆம்
அவன் விருப்பு எய்தவும் மலரவன் ஆசைப்
படவும் நின் அலர்ந்த மெய்க் கருணையும் நீயும்
அவனியில் புகுந்து எமை ஆட்கொள்ள வல்லாய்
ஆர் அமுதே பள்ளி எழுந்தருளாயே. 10.

## திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடம் கண்
மாதே வளருதியோ வன் செவியோ நின் செவி தான்
மாதேவன் வார் கழல்கள் வாழ்த்திய வாழ்த்து ஒலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம் மறந்து
போது ஆர் அமளியின் மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எம்தோழி பரிசு ஏல் ஓர் எம்பாவாய் 1.

பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல் நாம்
பேசும்போது எப்போது இப்போதுஆர் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீ சி இவையும் சிலவோ விளையாடி
ஏசும் இடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்புஆர் யாம்ஆர் ஏல் ஓர் எம்பாவாய். 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்து அன்ன வெள் நகையாய் முன்வந்து எதிர் எழுந்துஎன்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ஊறித்
தித்திக்கப் பேசுவாய் வந்து உன் கடைதிறவாய்
பத்து உடையீர் ஈசன் பழ அடியீர் பாங்கு உடையீர்
புத்து அடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டால் பொல்லா
எத்தோ நின் அன்புடைமை எல்லோம் அறியோமோ [தோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கு ஏல் ஓர் எம்பாவாய். 3.

ஒள் நித்திலம் நகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணம் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக் கொடு உள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கு ஒரு மருந்தை வேதம்விழுப் பொருளைக்
கண்ணுக்கினியானைப் பாடிக் கசிந்து உள்ளம்
உள்நெக்கு நின்று உருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயில் ஏல் ஓர் எம்பாவாய். 4.

மால் அறியா நான்முகனும் காண மலையினை நாம்
போல் அறிவோம் என்று உள்ள பொக்கங்களே பேசும்
பால்ஊறு தேன்வாய்ப் படிறீ கடை திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவு அரியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலம்குழலி பரிசு ஏல் ஓர் எம்பாவாய். 5.

மானே நீ நென்னலை நாளை வந்து உங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போனதிசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவு அரியான்
தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்
வான் வார்கழல்பாடி வந்தோர்க்கு உன்வாய் திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தம் கோனைப்பாடு ஏல் ஓர் எம்பாவாய். 6.

அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற்கு அரியான் ஒருவன் இரும் சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன் என்றே வாய் திறப்பாய்
தென்னா என்னா முன்னம் தீசேர் மெழுகு ஒப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னானை என் அரையன் இன் அமுது என்று எல்லோமும்
சொன்னோம் கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
வன்நெஞ்சம் பேதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின்பரிசு ஏல் ஓர் எம்பாவாய் 7.

கோழி சிலம்பச் சிலம்பும் குருகு எங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெள்சங்கு எங்கும்
கேழ் இல் பரஞ்சோதி கேழ்இல் பரங்கருணை
கேழ்இல் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழி ஈது என்ன உறக்கமோ வாய் திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆம் ஆறும் இவவாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடு ஏல் ஓர் எம்பாய் 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீர் அடியோம்
உன் அடியார் தாள் பணிவோம் ஆங்கு அவர்க்கே பாங்கு
அன்னவரே எம் கணவர் ஆவார் அவர் உகந்து [ஆவோம்
சொன்னபரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கு எம்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏல் ஓர் எம்பாவாய். 9.

பாதாளம் ஏழினும் கீழ் சொல் கழிவு பாதமலர்
போதுஆர் புனை முடியும் எல்லாம் பொருள் முடிவே
பேதை ஒரு பால் திருமேனி ஒன்று அல்லன்
வேதம் முதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டர் உளன்
கோது இல் குலத்து அரன் தன் கோயில் பிணாப் பிள்ளைகாள்
ஏது அவன் ஊர் ஏது அவன் பேர் ஆர் உற்றார் ஆர் அயலார்
ஏது அவனைப் பாடும் பரிசு ஏல் ஓர் எம்பாவாய் 10.

மொய்ஆர் தடம் பொய்கை புக்கு முகேர் என்னக்
கையால் குடைந்து குடைந்து உன் கழல் பாடி
ஐயா வழி அடியோம் வாழ்ந்தோம் காண் ஆர் அழல் போல்
செய்யா வெள் நீறுஆடி செல்வா சிறுமருங்குல்
மைஆர் தடம்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆள்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும்வகை எல்லாம் உய்ந்து ஒழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமை ஏல் ஓர் எம்பாய். 11.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்த்த பிறவித்துயர்கெட நாம் ஆர்த்து ஆடும்
தீர்த்தன் நல் தில்லைச்சிற்றம்பலத்தே தீ ஆடும்
கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளை சிலம்ப வார் கலைகள்
ஆர்ப்பு அரவம் செய்ய அணிகுழல் மேல் வண்டு ஆர்ப்பப்
பூத்திசமும் பொய்கை குடைந்து உடையான் பொன்பாதம்
ஏத்தி இரும்சுனை நீர் ஆடு ஏல் ஓர் எம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செம்கமலப் பைம் போதால்
அங்கம் குருகு இனத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எம்கோனும் போன்று இசைந்த
பொங்கு மடுவில் புகப் பாய்ந்து பாய்ந்து நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்து ஆர்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயம்பூம் புனல் பாய்ந்து ஆடு ஏல் ஓர் எம்பாவாய். 13.

காதுஆர் குழை ஆடப் பைம்பூண் கலன் ஆடக்
கோதை குழல்ஆட வண்டின் குழாம் ஆடச்
சீதம்புனல் ஆடிச் சிற்றம்பலம் பாடி
வேதம் பொருள் பாடி அப்பொருள் ஆமா பாடிச்
சோதி திறம் பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம் ஆமா பாடிப்
பேதித்து நம்மை வளர்த்து எடுத்தபெய்வளை தன்
பாதம்திறம் பாடி ஆடு ஏல் ஓர் எம்பாவாய். 14

ஓர் ஒருகால் எம்பெருமான் என்றே நம் பெருமான்
சீர் ஒருகால் வாய் ஓவாள் சித்தம் களிகூர
நீர் ஒருகால் ஓவா நெடும் தாரை கண் பனிப்பப்
பார் ஒருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான் பணியாள்
பேர் அரையற்கு இங்ஙனே பித்து ஒருவர் ஆம் ஆறும்
ஆர் ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வார் உருவம் பூண் முலையீர் வாய் ஆர நாம் பாடி
ஏர் உருவம் பூம் புனல் பாய்ந்து ஆடு ஏல் ஓர் எம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன் அம் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னச் சிலை குலவி நம் தம்மை ஆள் உடையாள்
தன்னில் பிரிவு இலா எம்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன் அருளே
என்னப் பொழியாய் மழை ஏல் ஓர் எம்பாவாய். 16

செங்கண அவன் பால் திசைமுகன் பால் தேவர்கள் பால்
எங்கும் இலாதது ஓர் இன்பம் நம்பாலதாக்
கொங்கு உண் கரும் குழலி நம் தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செம் கமலம் பொன்பாதம் தந்து அருளும் சேவகனை
அம் கண் அரசை அடியோங்கட்கு ஆர் அமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலம் திகழப்
பங்கயம் பூம்புனல் பாய்ந்து ஆடு ஏல் ஓர் எம்பாவாய். 17


அண்ணாமலையான் அடிக்கமலம் சென்று இறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறு அற்றால் போல்
கண் ஆர் இரவி கதிர்வந்து கார் கரப்பத்
தண் ஆர் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ஆகி ஆணாய் அலிஆய்ப் பிறக்கு ஒளிசேர்
விண்ஆகி மண் ஆகி இத்தனையும் வேறுஆகிக்
கண்ஆர் அமுதமும் ஆய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம் புனல்பாய்ந்து ஆடு ஏல் ஓர் எம்பாவாய். 18

உங்கையில்பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கு அப்பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கு ஒன்று உரைப்போம் கேள்
எம்கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க
எம்கை உனக்கு அல்லாது எப்பணியும் செய்பற்க
கங்குல் பகல் எம் கண் மற்று ஒன்றும் காணற்க
இங்கு இப்பரிசே எமக்கு எம்கோன் நல்குதியேல்
எங்கு எழில் என் ஞாயிறு எமக்கு ஏல் ஓர் எம்பாவாய். 19

போற்றி அருளுக நின் ஆதி ஆம் பாதம்மலர்
போற்றி அருளுக நின் அந்தம் ஆம் செம் தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றம் ஆம் பொன்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகம் ஆம்பூம்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறு ஆம் இணை அடிகள்
போற்றி மால் நால்முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாம் உய்ய ஆள் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி யாம் மார்கழி நீர் ஆடு ஏல் ஓர் எம்பாவாய். 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவெம்பாவை நடை பஜனையில்
பங்குபற்றிய அன்பர்களிற் சிலர்



பொன் விழாவை சிறப்பித்த சபையோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பன்னாலை திருவெம்பாவைக் கூட்டுப்பிரார்த்தனைச் சபை

பன்னாலை திருவெம்பாவைக் கூட்டு வழிபாட்டில் அநேக காலம் ஈடுபாடு கொண்டுழைத்து, இறைவனின் குஞ்சிதபாத நிழற்கீழ்ச் சேர்ந்த புனிதர்கள்.

திரு. சி. சின்னத்தம்பி J. P.
திரு பொன். முத்துக்குமாரு
திரு. த. சிவசுப்பிரமணியம்
திரு. வ. இலக்மனேஸ்வரன்
திரு. ச. சண்முகநாதன்
திரு தி தனபாலசிங்கம்
திரு. அசோகன்
திரு. த இலங்கைநாயகம்
செல்வன் வே. ஜெயகாந்தன்
செல்வன். வே ஜெயராசன்
திரு. வை. சிவலிங்கம்
திரு. சி. சிவ்ராசா
திரு. வி. சண்முகலிங்கம்
திரு. வ. முருகையா
செல்வன். சி. சிவபாலன்
செல்வன். சி. சிவகுமார்
செல்வன். சு. சண்முகசுந்தரம்
செல்வன். பா. தருமகிருஷ்ணன்
செல்வன். ச. சந்திரகாந்தன்
செல்வன். பா. சிவபாதம்

இவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவர்களின் குடும்பத்தினர்க்கும் ஆழ்ந்த அநுதாபத்தைச் செலுத்தி அஞ்சலி செய்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மறப்பது நன்றன்று.

பன்னாலை வாழ் மக்கள் தமிழும் சைவமும் தனிசிறப்புடன் விளங்கப் ஆர்வத்துடன் மேற்கொண்டு வரும் பணிகள் பல. அவற்றுள் ஒன்று திருவெம்பாவை வீதி பஜனையும் கூட்டு வழிபாடுமாகும். இப்பணியினை அறுபது ஆண்டுகள் அதிகாலையிலே மழை பனி குளிர் என்பனவற்றை பொருட்படுத்தாது நீராடி ஆசார சீலராக பக்திச் சுவையுடன் பாடி வரும் அடியார்கள் அவர்களுக்கும் உளம் கனிந்த நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

வைரவிழாவில் மலர்ந்த மலரில் சைவச்சான்றோர்கள் பலரின் ஆசி செய்திகளும் அறிஞர் பெருமக்களின் ஆக்கம் தரும் அறிவுக் கட்டுரைகளும், கவிதைகளும் பொலிந்து புதுமையுடன் விளங்கின்றன. இவ்விதம் எமது மலருக்கு அழகு மணமும், ஞான மணமும் ஒருங்கே தந்த பெரியார்களுக்கும் நாம் பெரிதும் கடப்பாடுடையோம். இம்மலர் வெளியீட்டுக்கும், விழா செலவினங்களுக்கும் தமது பொருள், பணம் வாரி வழங்கிய பேரன்பர்க்கும் இதயம் கனிந்த நன்றிகள். இம்மலரை சிறந்த முறையிலும் குறைந்த செலவிலும் உரிய காலத்தில் அழகுற அச்சிட்டு உதவிய பராசக்தி அச்சகத்தினருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

வைரவிழாவின் போது நேரில் வருகை தந்து மங்கள விளக்கு ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்த பெரியார்கள் அவர்களுக்கும் ஆசியுரை வழங்கிய கீரிமலை சிவன் ஆலய ஆதீன கர்த்தா அவர்களுக்கும், மலர் வெளியீடு செய்து பேருரையாற்றியவர்களுக்கும், சிறப்பு சொற்பொழிவாற்றியவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றிகள்.

ஆலோசனைகளை வழங்கி எம்மை வழி நடத்திய போஷகர்கள், விழாவை சிறப்புற அமைய ஒத்துழைப்பு நல்கிய செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி கூறி அமைக்கின்றேன்.

க. விக்னேஸ்வரர்
செயலாளர்.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பன்னாலை

## திருவெம்பாவைக் கூட்டுப்பிரார்த்தனைச் சபை

# வைர விழா

23-12-1999



மேற்படி சபையின்
60 ஆண்டு கால
சேவையினைக் கொண்டாடும் வகையில்
மார்கழி ஆதிரை நாளில் சிவபூதராயர்
ஆலய முன்றிலில் நடைபெறும் வைரவிழாவில்
அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

பன்னாலை,
தெல்லிப்பழை.

வைரவிழாச் சபை.

பராசக்தி அச்சகம் கே. கே. எஸ். வீதி, கொக்குவில் சந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org